234

234

CHILDREN'S STORIES

FROM

INDIAN HISTORY

FOR STANDARD V

2771

5 FEB 1945

1-45

By

K. S. SUBRAMANIA AYYAR, B.A., L.T.,

G. V. K. SWAMI & Co.,

PUBLISHERS

KUMBAKONAM :: MADRAS.

பாலர் இந்திய சரித்திரக் கதைகள்

(ஐந்தாவது வகுப்பிற்கு)

ஆசிரியர் :

K. S. சுப்பிரமணிய ஐயர், B.A., L.T.,

954

ஜி. வி. கே. ஸ்வாமி அண் கோ.,

பப்ளிஷர்ஸ்

கும்பகோணம் : : சென்னை

பதிப்புரிமை] 1944 [விலை அணு 9

First Impression 1944

V44

5 FEB 1945
MADRAS

முகவுரை

1939-ம் வருஷம் வெளிவந்துள்ள ஆரம்ப பாடசாலை புதிய பாடதிட்டத்தை அனுசரித்து "பாலர் இந்திய சரித்திரக் கதைகள்," புத்தகங்களை 4, 5, வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படத்தக்க முறையில் எழுதியுள்ளேன். இப் புத்தக வரிசைகளில், கையாளப்பட்டுள்ள வசன நடை மாணவர்கள் மனத்தில் ஊக்கத்தையும், உணர்ச்சியையும் உண்டாக்கக்கூடிய முறையில் எளிய நடையில் அமைந்திருக்கிறது.

தேவையான இடங்களில் உருவப் படங்களும், தேசப் படங்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

ஆசிரியர்களும் கல்வி இலாகா அதிகாரிகளும் இப் புத்தகங்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	திராவிடர்கள்	1
2.	ஆரியர்கள் - வேதகாலம்	3
3.	புத்த மதம் பரவுதல்	7
4.	கிரேக்கப் படையெழுச்சியும் அதன் பயனும்	11
5.	மௌரிய சந்திரகுப்தரும் சாணக்கியரும் ...	15
6.	மௌரிய அரசியல்	17
7.	அசோகரின் கல்வெட்டுச் சாசனங்கள் ...	20
8.	பல்லவர்கள்	22
9.	தமிழ் நாட்டு மன்னர்கள்	27
10.	சந்திர குப்த விக்கிரமாதித்தர்	35
11.	கஜினி மஹமூது	38
12.	முகம்மது கோரி	41
13.	மூன்று மதாச்சாரியர்கள்	44
14.	விஜய நகர ராஜ்யம்	49
15.	முகலாய ஆட்சியை முற்படுத்திய பாபர் ...	52
16.	மகா அக்பர்	55
17.	ஔரங்கசீப்	58
18.	ஐரோப்பியர் இந்தியாவுக்கு வருதல் ...	60
19.	சிவாஜியும் மகா ராஷ்டிரரும்	64
20.	ராபர்ட் கிளைவ்	68
21.	வாரன்ஹேஸ்டிங்ஸ்—இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கத் தொடக்கம்	71
22.	ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் ...	73
23.	வெல்லஸ்லி பிரபு	78
24.	வில்லியம் பெண்டிங்க் பிரபுவும் ராஜாராம் மோகன் ராயும் ...	81
25.	விக்டோரியா மகாராணியின் விளம்பரம் ...	84
26.	வைசிராய்களின் ஆட்சி - சமூக ராஜீய சீர்திருத்தங்கள் ...	86
27.	இந்திய முன்னேற்றம் ...	95

பாலர் இந்திய சரித்திரக் கதைகள்

ஐந்தாம் வகுப்பு

1. திராவிடர்கள்

மிகவும் பழமைவாய்ந்த நமது இந்திய நாட்டில் முதல் முதல் வாழ்ந்த நாகரீக மக்கள் திராவிடர்கள். இவர்கள் எங்கிருந்து நம் நாட்டிற்கு வந்தார்கள் என்று சரியாகத் தெரியவில்லை.

இவர்கள், மிகவும் நாகரீகமுடையவர்கள். ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் இவர்களே வாழ்ந்து வந்தார்கள். பிறகு இந்தியாவிற்குப் பல ஜாதியார்கள் வந்தார்கள். அவர்களுடன் திராவிடர்கள் கலந்து விட்டார்கள். பிற்காலத்தில் ஆரியர்கள் வட இந்தியாவில் குடியேறினார்கள்.

திராவிடர்கள் பேசிய பாஷைக்கு திராவிட பாஷை என்று பெயர். அது, முண்டா அல்லது கோலேரியன் வகுப்பைச் சேர்ந்தது. தென் இந்தியாவில் இப்போது வழங்கும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பாஷைகள் திராவிட பாஷையைச் சேர்ந்தவையேயாகும்.

திராவிடர்கள் உழுது பயிர் செய்வது, நெசவுத் தொழில் முதலியவற்றில் வல்லவர்கள். இவர்கள் கூட்டம் கூட்டமாக வசித்தார்கள். அவர்களுக்குத்

தலைவன் ஒருவன் உண்டு. அவன் சொல்படி தான் எல்லோரும் நடப்பார்கள். போர் செய்வதில் திராவிடர்களுக்கு ஆசை அதிகம். அவர்களே வில், வாள், அம்பு முதலிய ஆயுதங்களைச் செய்து கொண்டார்கள். போரில் முன்வைத்த காலை அவர்கள் பின் வைக்கமாட்டார்கள்.

நீலகிரியில் தோடர் குடிசை

முன்பு திராவிடர்கள் மரங்களையும், பாம்புகளையும், மின்னல், மழை முதலியவைகளையும் தெய்வங்களாகத் தொழுதார்கள். அவர்கள் தங்கள் தெய்வங்களுக்கு ஆடு, கோழி போன்ற பிராணிகளைப் பலி யிட்டார்கள். பிற்காலத்தில் இவர்கள் ஆரிய நாகரீகத்தைப் பின் பற்றி அவர்கள் தெய்வங்களை வணங்க ஆரம்பித்தார்கள்.

திராவிடர்கள் படகுகள், கப்பல்கள் முதலியவைகள் கட்டி வெளிநாட்டுடன் வியாபாரம் செய்

தார்கள். சில வருஷங்களுக்குமுன் பஞ்சாபில் சிந்து நதிக் கரையில் ஓர் இடத்தைத் தோண்டினார்கள். அங்கே ஓர் பழைய ஊர் புதைந்திருக்கக் கண்டார்கள். அதைக் கட்டியவர்கள் திராவிடர்கள் என்று கூறுகிறார்கள். இக்காலத்தில் திராவிடர்களும் ஆரியர்களும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். தென்னிந்தியாவில் வாழும் பெரும்பான்மையோர் திராவிடர்களின் சந்ததிகளேயாவர்.

கேள்விகள்

1. திராவிடர்கள் எங்கெங்கே குடியேறினார்கள்?
2. அவர்கள் கடைசியில் எங்கே தங்கினார்கள்? ஏன்?
3. திராவிடர்கள் எவ்வாறு வாழ்ந்தனர்?
4. திராவிட பாஷைகள் யாவை?
5. திராவிடர்களின் மதம் என்ன?

---

2. ஆரியர்கள் - வேதகாலம்

ஆரியர்கள் சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்குமுன் நம் நாட்டிற்கு வந்து குடியேறினார்கள். இவர்கள் பூர்வ காலத்தில் மத்திய ஆசியாவில் வசித்தார்கள் என்று சிலர் கருதுகிறார்கள். அவர்கள் அங்கே வசிக்க வசதிகள் குறைந்தபோது பல கிளைகளாகப் பிரிந்து ஐரோப்பாவிற்கும், பாரசீகத்திற்கும் இந்தியாவிற்கும் வந்து குடியேறினார்கள் என்று சிலர் கருதுகிறார்கள். இன்னும் சிலர் இவர்கள் இந்தியாவிலேயே இருந்தவர்கள் என்று கருதுகிறார்கள்.

வட இந்தியாவில் கங்கை, சிந்து நதிகளும், அவைகளின் உபநதிகளும் பாய்வதைப் பாருங்கள்.

இந் நதிகள் பாயும் பிரதேசம் மிகவும் செழிப்பானது. இங்கேதான் முதல் முதலில் ஆரியர்கள் கூட்



ஆரிய ராஜ்யங்கள்

டம் கூட்டமாகக் குடியேறினர்கள். நிலங்களைப் பயிரிட்டும், ஆடுமாடுகளை மேய்த்தும் இவர்கள் வாழ்ந்து

வந்தார்கள். இவர்கள் தேக வலிமையும் அழகான தோற்றமும் புத்திகூர்மையும் உடையவர்கள். இரும்பினுல் செய்த பல ஆயுதங்களை இவர்கள் உபயோகித்தார்கள். உழவுத் தொழிலில் இவர்கள் கை தேர்ந்தவர்கள். மண்ணுலும் உலோகங்களாலும் பாத்திரங்கள் செய்யக் கற்றுக்கொண்டார்கள். ஆரியப் பெண்கள் ஆடைகள் நெய்வதும், பாய், கூடை முதலியவைகள் பின்னுவதும், தங்கள் முக்கிய தொழிலாகக் கொண்டார்கள்.

ஆரியக் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வசித்து வந்தன. அவர்கள் கிராமங்களில் வசித்து வந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்துக்கும் தகப்பனே தலைவனுவான். அவன் சொல்படியே எல்லோரும் நடப்பார்கள். அதேமாதிரி கிராமத்திற்கும் தலைவனுண்டு. அவனே அவர்களுக்கு அரசனும் சேனைத் தலைவனுமாவான். ஆரியர்கள் பெண்களை விசேஷ கண்ணியத்துடன் நடத்தினர்.

ஆரியர்கள் பல தெய்வங்களை வணங்கி வந்தனர். சூரியன், அக்னி, வருணன், வாயு, இந்திரன் முதலிய தெய்வங்களை வணங்கி வந்தார்கள். அவர்கள் தெய்வங்களுக்குப் பல யாகங்கள் செய்தார்கள். ஓர் பெரிய தீயில் நெய் முதலிய உணவுப் பொருள்களை மந்திரங்கள் சொல்லி தெய்வங்களுக்குப் பூசை செய்தார்கள்.

ஆரியர்கள் தெய்வங்களைப் புகழ்ந்து பாடிய நூல்களே ருக்வேதம் என்பது. உலகத்திலுள்ள முதன்மையான நூல் ருக்வேதமேயாகும். ஆரியர்கள் அநேக விதமான சடங்குகளை அனுசரித்தார்

கள். அவைகள் செய்யும் முறைகளும் தந்திரங் களும் அதிகமாயின. அவைகளெல்லாம் யஜுர் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. யாகங்கள் செய்யும் சமயத்தில் ஆரியர்கள் வேத பாசுரங்களை இனிமையாகப் பாடுவது வழக்கம். அப்பாட்டுகளே ஸாமவேதம் என்பது. நான்காவது வேதம் அதர்வண வேதம் என்பது. அதில் பேய் பிசாசுகளை ஓட்டல், சூனியம், வியாதி முதலியவைகளை நீக்கும் மந்தி ரங்கள் முதலியவை அடங்கியுள்ளன. ஆரியர்கள் வைத்தியம், வான சாஸ்திரம், கணிதம், ரணசிகிச்சை, சிற்பம் முதலியவைகளில் தேர்ச்சிபெற்றிருந்தார் கள்.

வேதகாலத்தில் ஆரியர்களுக்கு ஜாதிபேதம் கிடையாது. ஆனல் நாளடைவில் ஜாதிவித்தியாசம் ஏற்பட்டது. வேதங்களை ஓதுவதும் யாகம் செய்வ தும் சிலருடைய தொழிலாயிற்று. இவர்கள் பிரா மணர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். போர் செய்வதும் நாட்டைப் பாதுகாப்பதும் சிலரது முக்கியமான தொழிலாக இருந்தது. இவர்கள் தான் க்ஷத்திரியர்கள் என்று அழைக்கப்படு கிறுர்கள். மற்ற மக்கள் விவசாயமும் வியாபார மும் செய்துவந்தனர். இவர்கள்தான் வைசியர் என்பவர்கள். முதல் முதலில் இந்த மூன்று ஜாதி களே இருந்தன. இந்த மூன்று ஜாதிகளுக்கும் பணி விடை செய்பவர்களை நான்காவது ஜாதியாகப் பிரித் தனர். நாளடைவில் இந்த நான்கு வகுப்பினரும் பல கிளை வகுப்பினராகப் பிரிந்தனர். அவர்களுள் வித்தியாசங்கள் அதிகரித்தன.ஜாதிக் கட்டுப்பாடுகள் அதிகரித்து உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற எண்ணமும் தோன்றலாயிற்று.

கேள்விகள்

1. ஆரியர்கள் யார்? அவர்கள் எப்படி நம் நாட்டுக்கு வந்தார்கள்?
2. அவர்கள் முதலில் எங்கே குடியேறினார்கள்? எவ்வாறு ஜீவனம் செய்தார்கள்?
3. ஆரியர்கள் வேதங்கள் யாவை?
4. ஆரியர்கள் நாகரீகத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
5. ஜாதிபேதம் எப்படி உண்டானது?

---

3. புத்த மதம் பரவுதல்

ஆரியர்கள் கங்கை நதிக் கரையில் குடியேறி அனேக ராஜ்யங்களை ஏற்படுத்தினார்கள். அவைகளில் ஒன்று சாக்கிய நாடு என்பது. இந்த சாக்கியர்களுக்கு சுத்தோதனர் என்ற ஓர் அரசர் இருந்தார். அவரது மனைவியின் பெயர் மாயாதேவி. இவர்களுக்குச் சுமார் கி. மு. 570-ல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக் குழந்தை பிறந்தபோது பல நற்குறிகள் தோன்றினவாம். அக் குழந்தைக்குச் சித்தார்த்தர் என்று பெயரிட்டார்கள். கௌதமர் என்ற வேறு பெயரும் அக்குழந்தைக்கு உண்டு. குழந்தை பிறந்தவுடன் ஓர் பெரியவர் தோன்றி அவர் பெரிய சக்கிரவர்த்தியாகவாவது அல்லது ஞானியாகவாவது ஆவார் என்று சொன்னார்.

சித்தார்த்தர் மிகவும் அருமையாக வளர்ந்து வந்தார். அவர், அரசர்களுக்கு வேண்டிய எல்லா வித்தைகளையும் கற்றுத் தேர்ந்தார். ஆனால், இவருக்குச் சிறு வயதிலிருந்தே விளையாட்டு, சிரிப்பு, வேட்டை

யாடுவது முதலியவைகளில் விருப்பம் கிடையாது. இவர் எப்போதும் ஆழ்ந்த யோசனையிலும் கவலையிலும் மூழ்கியிருப்பார். ஆகவே சுத்தோதனர் தன் மகன் இன்பமாக வாழவேண்டுமென்று சிறுவயதிலேயே அவருக்கு யசோதரை என்ற அழகிலும் குணத்திலும் சிறந்த இளவரசியை மணம் செய்து வைத்தார். இத்துடன் உலக இன்பங்கள் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டிய வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுத்தார். சிறிது காலத்திற்குப் பிறகு சித்தார்த்தருக்கு ராகுலன் என்ற ஓர் மகன் பிறந்தான்.

புத்தர்

சித்தார்த்தருக்குப் பட்டம், பதவி, மனைவி, மக்கள் எல்லாம் இருந்தன. உலகத்தில் மக்கள் படும் கஷ்டம் ஒன்றும் சித்தார்த்தருக்கு தெரியாவண்ணம் சுத்தோதனர் பார்த்து வந்தார். ஒருநாள் சித்தார்த்தர் வீதிவழியே குதிரைமேல் சவாரிசெய்தார். வழியில் முதலில் ஓர் கிழவனைக் கண்டார். அதிலிருந்து

எல்லோரும் மூப்படைந்து வருந்த வேண்டுமென்று கண்டார். பிறகு நோயினல் வருந்தும் ஒருவனைக் கண்டார். அவனைக் கண்டவுடன் மனம் நொந்தார். கடைசியாக ஓர் பிணத்தைக் கண்டார். அதிலிருந்து உலக வாழ்வு துக்கமயமானது. மனிதன் அழியக் கூடியவன் என்று அறிந்தார். உடனே உலகத் துன்பங்களாகிய மூப்பு, நோய், சாவு இவைகளைப் போக்குவது எப்படி என்று சிந்திக்க ஆரம்பித்தார். துன்பமயமாகிய இவ்வுலகத்தையே வெறுக்க ஆரம் பித்தார். ஓர் இரவு தம் இளம் மனைவியையும் பச்சைக் குழந்தையையும், அரசவாழ்வையும், இன்பங்களையும் விட்டு அரண்மனையை விட்டு வெளிச் சென்று துறவி யானுர்.

அவர் முதலில் வைசாலி நகரம் சென்று அங்குள்ள மகான்களிடத்தில் வேதாந்தம் கேட்டார். அவைகளால் அவருக்கு மனச்சாந்தி ஏற்படவில்லை. பிறகு காட்டில் புகுந்து ஆறு வருஷ காலம் கடும் தவம் செய்தார். இதனல் யாது பயனும் அவருக்கு ஏற்பட வில்லை. மனச்சாந்திக்கு தவம் உபயோகமில்லை என் பதை அவர் உணர்ந்தார். பிறகு அவர் கயா என்ற இடத்திற்குச் சென்றுர். அங்கே ஓர் மரத்தின் அடி யில் உட்கார்ந்துகொண்டு தியானம் செய்தார். ஒரு நாள் அவருக்கு ஞானேதயம் ஏற்பட்டது. மனிதர்க ளின் துன்பங்களை ஒழிக்க ஓர் வழியைக் கண்டுபிடித் தார். அது முதல் அவருக்கு புத்தர் என்ற பெயர் ஏற்பட்டது. அவருக்கு ஞானேதயமுண்டான இடத்தி லிருந்த மரத்திற்குப் போதிவிருக்ஷம் என்று பெயர்.

புத்தர் தாம் கண்டறிந்த உண்மைகளை உலகத் தாருக்குப் போதிக்கலானுர். மனித வாழ்க்கை துக்க மயமானது. அந்த துக்கத்திற்குக் காரணம் ஆசை

தான். ஆசையை ஒழித்தால் துக்கம் நீங்கிவிடும். துக்கம் நீங்குவதுதான் மோக்ஷம் என்பது. எல்லா மக்களையும் சகோதர சகோதரிகளாகப் பாவிக்க வேண்டும். எல்லோரிடத்தும் அன்பாக இருக்கவேண்டும்; ஜீவஹிம்சை செய்யக் கூடாது. நல்ல எண்ணம், நற்செய்கை, நற்குணம் வேண்டும் என்பவைகளே அவருடைய முக்கிய போதனைகளாகும்.

இந்த உபதேசங்களைப் புத்தர் ஊர் ஊராகச் சென்று ஜனங்களுக்கு உபதேசித்தார். பலர் இவருக்கு சிஷ்யர்கள் ஆனார்கள். அவர்களுக்கு பௌத்தர்கள் என்று பெயர். அவர் போதித்த மதமே பௌத்த மதம் என்பது. அநேக அரசர்களும் இவருக்கு சிஷ்யர்கள் ஆனார்கள். அவர்களைக்கொண்டு இம்மதத்தை இன்னும் அதிகமாகப் பரவச் செய்தார்.

புத்த மதம் வெகு விரைவில் பரவ ஆரம்பித்தது. இதற்குக் காரணம் புத்த மதத்தில் ஜாதி வேற்றுமை கிடையாது. கஷ்டமான தவங்களும் யாகங்களும் கிடையாது. புத்தர் மிக வசீகர சக்தி வாய்ந்தவர். பௌத்த மதக் கொள்கைகள் மிக எளிதாகவும் எல்லோருக்கும் விளங்கும்படியாகவும் இருந்தன. புத்தர் தம்முடைய எண்பதாம் வயதில் குசிநகரம் என்ற இடத்தில் முக்தி அடைந்தார்.

கேள்விகள்

1. பௌத்த மதம் ஏன் ஏற்பட்டது?
2. புத்தரின் இளமை வாழ்க்கை எவ்வாறு இருந்தது?
3. புத்தரின் கொள்கைகள் யாவை ?
4. அம் மதம் ஏன் சீக்கிரம் பரவியது?

4. கிரேக்கப் படையெழுச்சியும் அதன் பலனும்

கிரீஸ் தேசத்தில் மாஸிடோனியா என்ற ஓர் நாடு இருந்தது. அதைப் பிலிப் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் மிகவும் பலம் பொருந்தியவர். சுற்றுப் புற நாடுகளை யெல்லாம் வென்று தம் அதிகாரத்தை நிலைநாட்டினர். அவருக்கு அலெக்ஸாந்தர் என்ற ஓர் குமாரர் இருந்தார். அவர் அரசரான வுடன் பல தேசங்களை ஜயிக்க எண்ணம் கொண்டார். முதலில் பாரசீக தேசத்தின்மேல் படையெடுத்தார். எகிப்து, சிறிய ஆசியா முதலிய தேசங்களையும் ஜயித்தார். பிறகு ஆப்கானிஸ்தானத்தை அடைந்து காபூலையும் கைப்பற்றினர். பிறகு கி. மு. 326-ம் வருஷம் சிந்து நதியைக் கடந்து இந்தியாவில் பிரவேசித்தார். அலெக்ஸாந்தர் அக்காலத்தில் மிகவும் சிறந்த போர்வீரர். தேகபலமும் ஆண்மையும் மனோதிடமும் உடையவர்.

இவர் இந்தியாவிற்கு வந்தபோது வட இந்தியாவில் பல ராஜ்யங்கள் இருந்தன. அவைகளின் அரசர்கள் ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் சண்டை செய்துகொண்டிருந்தனர். ஆகவே அலெக்ஸாந்தர் அவர்களை எளிதில் வெல்ல முடிந்தது. முதலில் அலெக்ஸாந்தர் மேற்கு பஞ்சாப்பை நோக்கிச் சென்றார். தக்ஷசீலம் என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு அம்பி என்ற ஓர் அரசர் அங்கே ஆண்டு வந்தார். தக்ஷசீலம் ஓர் சிறந்தநகரமாக விளங்கியது. அங்கே கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற பல பெரியோர்கள் இருந்தார்கள். அங்கே ஓர் சர்வகலாசாலையுமிருந்தது.

அலெக்ஸாந்தர் தக்ஷசீலத்தின் மேல் படையெடுத்து வருகிறார் என்று அறிந்தவுடன் அம்பி என்ற அந்த நாட்டு அரசர் ஓர் பெரிய சேனையுடன் சென்று அவரை வரவேற்று உபசரித்தார். அம்பியும் அலெக்ஸாந்தரும் சிறந்த நண்பரானார்கள்.

அலெக்ஸாந்தர்

அம்பி அவருக்கு 5000 வீரர்களைத் தந்தார். அலெக்ஸாந்தர் அங்கே சில காலம் தங்கியிருந்து வட இந்திய மன்னர்களெல்லாம் தம்மைத் தலைவராக ஏற்றுக் கீழ்ப்படிய வேண்டுமென்று ஓர் தூது அனுப்பினார். பல அரசர்கள் அதற்கு இணங்கிக் கீழ்ப்படிந்தார்கள்.

அப்போது ஜீலம் நதியின் கிழக்கில் புருஷோத்தமர் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் மட்டும் அலெக்ஸாந்தருக்கு இணங்கவில்லை. அவர் அலெக்ஸாந்தருடன் போர் செய்யத் தயாரானார். அவர் ஜீலம் நதிக் கரையிலுள்ள கறீ என்னுமிடத்தில் ஓர் பெரிய சேனையுடன் அலெக்ஸாந்தரை எதிர்க்கக் காத்திருந்தார். அலெக்ஸாந்தர் நதியைக் கடந்து

அவரிருக்கும் மைதானத்தை அடைந்தார். இரு சேனைகளுக்கும் கடும்போர் நடந்தது.

சுத்த வீரராகிய புருஷோத்தமர் மிக வீராவேசத்துடன் போர் செய்தார். விரோதியின் அம்புகள் அநேகம் அவர் உடலில் தைத்தன. அவரது யானை அவைகளை யெல்லாம் பிடுங்கிற்று. ஆனபோதிலும் யுத்தப் பயிற்சி அதிகமுள்ள கிரேக்க வீரர்களே முடிவில் வெற்றி பெற்றனர். அவர்கள் புருஷோத்தமரைச் சிறைப்பிடித்துச் சென்று அலெக்ஸாந்தர் முன் நிறுத்தினர். அலெக்ஸாந்தர் புருஷோத்தமரைப் பார்த்து "உம்மை எவ்வாறு நடத்த வேண்டும்?" என்று கேட்டார். உடனே புருஷோத்தமர் சற்றும் பயமின்றி, "ஒரு அரசனை நடத்துவது போல நடத்த வேண்டும்" என்று பதிலளித்தார். அவரது வீரத்தையும் தைரியத்தையும் கண்டு அலெக்ஸாந்தர் மிகவும் மகிழ்ந்து அவரை விடுதலை செய்து அவரது ராஜ்யத்தை அவருக்கே கொடுத்து விட்டார். பிறகு அலெக்ஸாந்தர் பியாஸ் நதி வரையிலுள்ள பிரதேசங்களை ஜெயித்து அவைகளையும் புருஷோத்தமருக்கே கொடுத்துவிட்டார். தான்வென்ற இடங்களில் அலெக்ஸாந்தர் பல வெற்றிக் குறிகளை நாட்டினர்.

அலெக்ஸாந்தர் இந்தியாவிலேயே தங்கி இருந்து இன்னும் சில நாடுகளை ஜயிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார். ஆனல் அவருடைய போர் வீரர்கள் களைப்பு அடைந்திருந்தார்கள். தங்கள் தாய் நாடு திரும்ப ஆசை கொண்டார்கள். அவர்களுடைய விருப்பத்திற்கு அலெக்ஸாந்தர் இணங்க வேண்டியதாயிற்று. ஆகவே, அவர் பஞ்சாப்பில் ஒரு கிரேக்கப் படையை நிறுத்தி விட்டுத் தம் நாடு திரும்பினர். அவருடைய வீரர்கள் ஜீலம், சிந்து நதி

களின் வழியாகக் கடலுக்குச் சென்று தம் நாட்டை அடைந்தனர். போகும் வழியில் அலெக்ஸாந்தர், பாபிலோன் என்ற இடத்தில் கடும் சுரம் கண்டு கி. மு. 323-ம் வருஷத்தில் காலமானர். உலகத்தில் தோன்றிய மாபெரும் வீரர்களில் இவர் ஒருவராவர். இவருடைய ராஜ்யங்கள் பல பாகங்களாகப் பிரிந்தன. ஆங்காங்கு அவருடைய தளகர்த்தர்கள் அரசரானர்கள்.

கிரேக்கப் படையெழுச்சியின் காரணமாக இந்தியாவின் வடமேற்கில் அநேக கிரேக்க நாடுகள் ஏற்பட்டன. இந்தியாவில் பல பலன்கள் ஏற்பட்டன. கிரேக்க நாகரீகம் இந்தியாவில் பரவியது. இந்திய நாகரீகமும் கலைகளும் கிரேக்கருக்குத் தெரிந்து அவர்கள் மூலம் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் தெரியவந்தது. மேல் நாடுகளுக்கும் நமக்கும் பல வியாபார மார்க்கங்கள் ஏற்பட்டன. அதனல் வியாபாரமும் போக்குவரத்தும் அதிகரித்தன. சிற்பம், கணிதம், வானசாஸ்திரம் முதலிய கலைகளில் இந்தியர்களுக்குத் தெரிந்ததைக் கிரேக்கர்கள் கற்கவும் கிரேக்கர்களுக்குத் தெரிந்ததை இந்தியர்கள் கற்கவும் வசதி ஏற்பட்டது.

கேள்விகள்

1. அலெக்ஸாந்தர் ஏன் இந்தியாவிற்கு வந்தார்?
2. அவர் யாருடன் சண்டை செய்தார்?
3. அதன் முடிவு என்ன?
4. அம்பி, அலெக்ஸாந்தரிடம் எவ்வாறு நடந்து கொண்டார்?
5. அவரது வீரர்கள் ஏன் சீக்கிரம் திரும்பி விட்டார்கள்?
6. கிரேக்கப் படையெழுச்சியினல் ஏற்பட்ட விளைவு யாது?

5. மௌரிய சந்திரகுப்தரும் சாணக்கியரும்

அலெக்ஸாந்தர் இந்தியாவின் மேல் படையெடுத்து வந்தபோது வட இந்தியாவில் மகத ராஜ்யம் மிகவும் மேன்மை அடைந்திருந்தது. அதை நந்த வம்சத்து அரசராகிய மகாபத்ம நந்தர் ஆண்டு வந்தார். அவரும் அவர் குமாரர்களும் மிகவும் கொடூரமாக ஆண்டார்கள். ஆகவே ராஜ்யத்தில் அவர்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது.

மகாபத்ம நந்தருக்கு நெருங்கிய உறவினர் சந்திரகுப்தராவர். இவருக்கும் நந்த வம்சத்து அரசர்களுக்கும் பகை ஏற்பட்டது. ஆகவே அவர்கள் சந்திரகுப்தரை நாட்டை விட்டுத் துரத்திவிட்டனர். அப்போது சந்திரகுப்தர் நந்தர்களைப் பழிவாங்கத் தீர்மானித்தார். அச் சமயத்தில்தான் சாணக்கியர் என்பவர் சந்திரகுப்தரைச் சந்தித்தார்.

மகத ராஜ்யத்தின் தலைநகராகிய பாடலிபுரத்தில் சாணக்கியர் என்ற பிராமணர் வசித்துவந்தார். அவர் எல்லா சாஸ்திரங்களையும் படித்தவர். புத்தி கூர்மையும், ராஜதந்திரமும் படைத்தவர். அவர் ஓர் நாள் நந்தர் சபைக்குச் சென்றார். அங்கே நடந்த ஓர் விருந்தில் நந்தர்கள் அவரை மிகவும் மரியாதைக் குறைவாகப் பேசிவிட்டார்கள். உடனே சாணக்கியர் நந்தர்களை ஒழித்து விடுவதாகச் சபதம் செய்துகொண்டு வெளியேறினர்.

சாணக்கியர் தம் சபதத்தை நிறைவேற்றச் சந்திரகுப்தரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டார். சந்திரகுப்தரும் சாணக்கியரின் சிறந்த அறிவையும், ராஜ தந்திரத்தையும் கண்டு, அவரைத் தம்முடைய மந்திரியாகச் செய்துகொண்டார்.

பிறகு அவர் ஓர் சிறிய படையைத் திரட்டிக் கொண்டு அலெக்ஸாந்தர் விட்டுச் சென்றிருந்த கிரேக்கப் படையைத் துரத்தினார். மகத நாட்டின் மேல் படையெடுத்து சந்திரகுப்தர் நந்த வம்சத்தினரை வென்று அந்நாட்டைக் கைப்பற்றினார். வெகு சீக்கிரத்தில் வட இந்தியாவிலிருந்த எல்லா அரசர்களையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டார். பாடலிபுரத்தில் மௌரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினார். சந்திரகுப்தரின் தாயின் பெயர் முரா என்பதினால் அவர் ஏற்படுத்திய வம்சத்துக்கு மௌரிய வம்சம் என்று பெயர் ஏற்பட்டது.

அலெக்ஸாந்தருக்குப் பிறகு கிரேக்க சாம்ராஜ்யத்தின் கிழக்குப் பகுதி ஸெலுகஸ் நிகேடார் என்ற தலைவனுக்குக் கிடைத்தது. பஞ்சாப்பை சந்திரகுப்தர் கைப்பற்றியவுடன் அவர் அதை மீட்க ஓர் கிரேக்கப் படையுடன் சந்திரகுப்தருடன் போர்புரிய வந்தான். ஆனால் சந்திரகுப்தரால் தோற்கடிக்கப்பட்டு சமாதானம் செய்து கொண்டான். சந்திரகுப்தருக்கு ஆப்கனிஸ்தானம் கிடைத்தது. ஸெலுகஸின் மகளைச் சந்திரகுப்தர் மணம் செய்து கொண்டார். ஸெலுகஸிற்கு 500 யானைகளை அரசர் பரிசாக வழங்கினார். கிரேக்க ராஜதூதரான மெகாஸ்தனீஸ் என்பவர் சந்திரகுப்தரின் சபைக்கு வந்தார். இவர் இண்டிகா என்ற ஓர் நூலில் சந்திர குப்தரையும் இந்தியாவையும் பற்றி எழுதியிருக்கிறார். அந்த நூலிலிருந்து சந்திரகுப்தரின் ஆட்சியின் மேன்மையை நாம் அறியலாம்.

சந்திரகுப்தருக்குப் பலவகையிலும் உதவி செய்தவர் சாணக்கியர். அவருக்கு கௌடில்யர், விஷ்ணு குப்தர் என்ற வேறு பெயர்களும் உண்டு.

நந்தர்கள் சந்திரகுப்தரைக் கொல்ல சமயம் பார்த் திருந்தார்கள். அந்த ஆபத்திலிருந்து சாணக்கியர் அரசரைக் காப்பாற்றினர்.

சாணக்கியர் அரசாட்சியிலும் அரசருக்கே உதவி புரிந்தார். அவர் அர்த்தசாஸ்திரம் என்ற ஓர் நூலை எழுதினர். அரசருக்கு வேண்டிய எல்லா விஷயங்களும் அதில் அடங்கியுள்ளன. தற் காலத்திலும் அரசாங்க நூலறிஞர்கள் இதை மிகவும் போற்றிப் படிக்கிறார்கள்.

சந்திரகுப்தர் சுமார் 25 வருஷம் அரசாண் டார். இவர் ஆட்சியில் நாடு மிகவும் மேன்மை அடைந்தது. இவர் கடைசி காலத்தில் துறவியாக இருந்து இறந்தார் என்று சிலர் கூறுகின்றனர்.

கேள்விகள்

1. நந்த வம்சத்து கடைசி அரசர் யார்?
2. சந்திரகுப்தர் எவ்வாறு மகத நாட்டுக்கு அரச ரானர்?
3. சாணக்கியர் யார்? அவர் எழுதிய நூல் எது? அதில் என்ன கூறப்பட்டுள்ளது?
4. குறிப்பு எழுதுக:—
   செலுகஸ்நிகேடார், மெகாஸ்தனீஸ்.

---

6. மௌரிய அரசியல்

மௌரிய சந்திரகுப்தரின் ராஜ்யம் கிழக்கில் வங்காளத்திலிருந்து மேற்கில் இந்துகுஷ் மலைகள் வரையிலும், வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே விந்தியமலை வரையிலும் பரவியிருந்தது. அவருக்குப் பின் ஆண்ட அசோகரின் ராஜ்யம் அதைக் காட்

டிலும் பெரிதாக இருந்தது. தென் இந்தியாவிலும் இவர்கள் ராஜ்யம் பரவியிருந்தது.

சந்திரகுப்தர் தம் பிரதேசங்களை மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஓர் கவர்னரை நியமித்தார். கவர்னர்களில் அநேகர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். தாம் வென்ற அரசர்களை தமக்குச் சிற்றரசர்களாகச் செய்து கொண்டார். சிலரைப் பட்டத்திலிருந்து விலக்கி அவர்கள் ராஜ்யத்தைத் தன்னுடையதாகச் செய்து கொண்டார்.

மாகாணங்கள் பல ஜில்லாக்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ராஜப் பிரதிநிதிகளும் கவர்னர்களும் தங்கள் பிரதேசங்களில் வரி வசூல் செய்து அரசருக்கு அனுப்பினர்கள். குடிகளிடத்தில் ஏற்பட்ட வழக்குகளை விசாரிக்க நியாயாதிபதிகள் ஏற்பட்டார்கள். அவர்களுக்கு மகாமித்திரர்கள் என்று பெயர். ஒவ்வோர் கிராமத்திலும், கிராமணி என்னும் தலைவன் இருந்தான். அநேக கிராமங்களுக்குத் தலைவன் கோபன். இவர்கள் எல்லோரும் ராஜப்பிரதிநிதியின் கீழ் வேலை பார்த்தார்கள்.

குடியானவர்கள் தாங்கள் பயிர் செய்த பொருளில் ஓர் பாகத்தை வரியாகச் செலுத்தினர்கள். வியாபாரிகளுக்கும் வரி விதிக்கப்பட்டது. அரசரிடத்தில் எப்போதும் ஓர் பெரிய சைன்யம் இருந்தது. காலாட்கள், குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, கடற்படை என்ற ஐந்து பிரிவுகளாகச் சேனை பிரிந்திருந்தது. இவைகளைத் தனித்தனி நிர்வாக சபை கவனித்து வந்தது.

நாட்டிலிருந்த பெரிய நகரங்களையும், தலைநகரமாகிய பாடலிபுத்திரத்தையும் சிறப்பாகக் கவனித்து

வந்தார்கள். பாடலிபுரத்து முனிசிபல் நிர்வாகம் மிகவும் சிறப்புற்றது. அந்நகரில் 30 பேர்கள் கொண்ட ஓர் நிர்வாக சபை இருந்தது. இச்சபை ஐந்து பேர்கள் கொண்ட ஆறு பஞ்சாயத்தாகப் பிரிந்திருந்தது. வியாபாரம், தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், ஜனனமரணக் கணக்குகள், ராஜ்யத்திற்கு வரும் அயல் நாட்டினர் முதலிய விஷயங்களை இச்சபை கவனித்து வந்தது. வெளிநாட்டு விருந்தாளிகளுக்கு விடுதிகள், ஆட்கள், வைத்திய உதவி முதலிய எல்லா வசதிகளையும் இச்சபை செய்து கொடுத்தது. ஜனங்கள் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் வாழ்ந்தார்கள். வியாபாரம் செழித்திருந்தது. குற்றவாளிகள் மிகவும் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். ஆகவே ராஜ்யத்தில் கொலை, களவு முதலிய குற்றங்கள் அதிகமாக நடைபெறவில்லை. மௌரியர் அரசியல் மிகவும் சிறந்து விளங்கியது.

சந்திரகுப்தர் மரணத்திற்குப் பிறகு அவர் குமாரர் பிந்துசாரர் அரசரானார். இவர் சுமார் 25 வருஷங்கள் ஆண்டார். இவருக்குப் பின் அசோகர் சிம்மாசனம் ஏறினர். இவர்கள் காலத்திலும் மௌரிய அரசியல் மிகவும் மேன்மையாக நடந்துவந்தது.

கேள்விகள்

1. மௌரிய ராஜ்ய விஸ்தீரணம் என்ன?
2. ராஜப் பிரதிநிதிகள் எவ்வாறு அரசியலை நடத்தினார்கள்?
3. நகர நிர்வாகம் எவ்வாறு நடந்தது?
4. மௌரிய ஆட்சியில் மக்கள் எவ்வாறு இருந்தார்கள்?

7. அசோகரின் கல்வெட்டுச் சாசனங்கள்

மௌரிய வம்சத்து அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் அசோகர். அவர் மிகவும் சிறப்புடன் 40 வருஷங்கள் ஆண்டார். அவரது ராஜ்யம் வடக்கில் இந்துகுஷ் மலை முதல் தெற்கில் மைசூர் வரையில் பரவி இருந்தது. அசோகர் அடைந்த வெற்றிகளில் கலிங்க நாட்டை ஜெயித்தது மிகவும் முக்கியமானது. இந்தப் போரில் ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டதால் அசோகருக்கு மனமாற்றம் ஏற்பட்டது. அவர் உடனே பௌத்த மதத்தைப் பின்பற்றினர். வேட்டையாடுவதையும் மாமிசம் புசிப்பதையும் நிறுத்தினர். தம் மக்கள் மிருகங்களைக் கொல்லக்கூடாது என்று உத்தரவு இட்டார்.

மக்கள் தரும வழியில் நடந்து சந்தோஷமாக வாழ்வதில் தம் கவனத்தைச் செலுத்தினர். அவர் அன்பினலும் சாந்த குணத்தினலும் மக்களைத் தம் வசப்படுத்த எண்ணினர். தம் ராஜ்யத்தின் பல பாகங்களுக்கும் அந்நிய நாடுகளுக்கும் பௌத்த சந்நியாசிகளை அனுப்பி புத்தமதக் கொள்கைகளைப் பரவச் செய்தார்.

அசோகர் தர்ம மகா மாத்திரர்கள் என்ற சில உத்தியோகஸ்தர்களை நியமித்து தேசத்தில் எங்கும் புத்த மதம் பரவ வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். பல இடங்களில் பாறைகளிலும் கல்தூண்களிலும் பிராகிருத பாஷையில் பௌத்தமதக் கொள்கைகளை எழுதி வைத்தார். அவைகளுக்குத்தான் அசோகரின் கல்வெட்டுச் சாசனங்கள் என்று பெயர். அவைகளில் "பெற்ரோர்களுக்குக் கீழ்ப் படியவேண்டும்," "எல்லா உயிர்களிடத்தும் அன்பாக இருக்க வேண்டும்," "உண்மை பேச வேண்டும்," "பெரியோர்

களிடத்தும் குருமார்களிடத்தும் மரியாதையாக இருக்கவேண்டும்'' என்று செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த கல்வெட்டுகளை இன்றும் பெஷாவர், நேபாளம், மைசூர் முதலிய இடங்களில் காணலாம்.

அசோகர் இன்னும் பல சிறந்த செயல்கள் செய்தார். அவர் பாதைகளைச் செப்பனிட்டு ஓரங்களில் நிழல் தரும் மரங்களை வைத்தார். அநேக கிணறுகளையும் குளங்களையும் வெட்டினார். வழிகளில் பிரயாணிகள் தங்குவதற்கு மடங்கள் கட்டினார். எல்லா மதத்தினர்களுக்கும் தகுந்த மரியாதைகள் செய்தார்.


அசோகர் நாட்டிய கல் தூண்

''எனது குடிமக்கள் ஒழுங்காகவும் ஒழுக்கத்துடனும் இருப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்திருக்கிறேன். எனக்குப் பின் வருபவர்கள் தரும மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்காகவே இக் கல்வெட்டுகளைச் செதுக்கியுள்ளேன்'' என்று சொல்லி இருக்கிறார்.

தருமநீதி வழியில் நடந்து மக்களுக்கு உதாரண புருஷராக இருந்து தம் மக்களை நல்வழிப்படுத்திய அரசர் அசோகர் ஒருவரே யாவர். சண்டையினுல் கிடைக்கும் புகழைவிடச் சமாதானத்தினுல் உண்டாகும் கீர்த்தியே சிறந்தது என்று அவர் கருதினுர். இவ்வித மேன்மையான குணங்களைக் கொண்ட வேறு ஓர் அரசரைக் காண்பது அரிது. அவர் நீதி தவருது தரும நெறியைப் பின்பற்றி ஆட்சி செய்து கி. மு. 232-ல் காலகதி அடைந்தார். அவருக்குப் பின்னுல் மௌரிய ராஜ்யம் சீர்குலைய ஆரம்பித்தது.

கேள்விகள்

1. கலிங்கப் போரின் பயன்கள் யாவை?
2. அசோகர் மக்களை எவ்வாறு நல்வழிப்படுத்தினுர்?
3. அசோகரின் கல்வெட்டுகளிலிருந்து நாம் அறிவதென்ன?
4. அசோகரின் நற்காரியங்கள் யாவை?

---

8. பல்லவர்கள்

தென் இந்தியாவில் சுமார் 1300 வருஷங்களுக்கு முன் பல்லவர்கள் என்ற வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் பிரபலமாக ஆண்டு வந்தனர். அவர்கள் யாரென்றும் எங்கிருந்து வந்தார்கள் என்றும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. இவர்கள் வேறு நாட்டினர், சாகர்கள், பார்த்தியர்கள், நாக வம்சத்தினர் என்று பலவாறு கூறுகிறுர்கள்.

இவர்கள் வரலாறு எவ்வாறு இருப்பினும் இவர்கள் தென்னுட்டுக்கு வந்ததினுல் மிகுந்த புகழும் பெருமையும் ஏற்பட்டன. இவர்கள் காஞ்சீபுரத்

தைத் தலைநகரமாகக்கொண்டு ஆண்டார்கள். செங்கல்பட்டு, வட ஆற்காடு, திருச்சி ஜில்லாக்களில் இவர்களால் கட்டப்பட்ட பல அழகிய கட்டிடங்களும், கோவில்களும் இன்றும் காணப்படுகின்றன. தற்



தென் இந்தியா

காலத்தில் தென் இந்தியாவிலுள்ள கள்ளர், மறவர், வன்னியர் முதலியவர்களைப் பல்லவர்கள் என்று கருதுகிறார்கள்.

பல்லவர்களின் ராஜ்யம் கிருஷ்ணா நதி முதல் காவிரி நதி வரையில் பரவி இருந்தது. அதன் தலைநகரம் காஞ்சீபுரம் என்று ஏற்கனவே அறிவீர்கள்.



மஹாபலிபுரம் கோவில்கள்

பல்லவர்களுக்குத் தொண்டைமான்கள் என்ற பெயர் இருந்தபடியால், காஞ்சீபுரத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்திற்கு அக்காலத்தில் தொண்டை மண்டலம் என்று பெயர் ஏற்பட்டது.

பல்லவ அரசர்களில் சிவஸ்கந்த வர்மன் என்பவர் மிகவும் புகழ் பெற்றவர். அவர் ஓர் அசுவமேத யாகம் செய்தார். அவருக்குப் பின் ஆரும் நூற்ருண்டில்தான் பல்லவர்கள் மறுபடியும் புகழடைந்தார்கள். மகேந்திர வர்மன் என்பவர் முதலில் காஞ்சியில் ஆண்ட பலம் பொருந்திய அரசராவார். இவர் சாளுக்கியர்களோடு சண்டைசெய்து வெங்கி நாட்டை இழந்தார். ஆனால் தெற்கே ஆண்ட சோழ அரசரை வென்று திருச்சியைத் தம் இரண்டாம் தலைநகராக்கிக் கொண்டார். அவர் காஞ்சீபுரத்தில் பல கோவில்களைக் கட்டி அழகுபடுத்தினர். அங்கு வைகுண்டநாதர் கோவிலும், கற்பாறைகளால் கட்டப்பட்டிருக்கும் கைலாஸ நாதர் கோவிலும் அவரால் கட்டப்பட்டவைகளே. இன்னும் இவர் அரக்கோணத்திற்கு அருகிலுள்ள மகேந்திரவாடி என்னும் கிராமத்தையும் கட்டினர். இவர் குடிகளுக்குப் பல நீர்ப் பாசன வசதிகள் செய்து கொடுத்தார்.

அவருக்குப் பின் அவர் மைந்தன் நரசிம்மவர்மன் அரசரானர். இவர் வெங்கி நாட்டை சாளுக்கியரிடமிருந்து மீட்டார். இவர் கி. பி. 625 முதல் 645 வரையில் ஆண்டார். இவர் ஓர் பெரிய வீரர். இவருக்கு மாமல்லன் என்றும் பெயர் உண்டு. இவர் பராக்கிரமசாலியான இரண்டாம் புலிகேசி என்ற சாளுக்கிய அரசனைத் தோற்கடித்தார்.

இவர் காலத்தில் மாமல்லபுரம் என்ற ஓர் அழகிய நகரம் இருந்தது. அது அவர்களுடைய முக்கிய

துறைமுகமாக விளங்கியது. சென்னைக்குச் சுமார் 40 மைல் தூரத்தில் இருக்கும் மஹாபலிபுரம் என்னும் கிராமம்தான் அத்துறைமுகமாகும். அதைத் திருக்கடன்மல்லை, ஏழுகோவில் பட்டணம் என்றும் அழைக்கிறார்கள். நரசிம்ம வர்மன் இங்கு பலகோவில்களையும், கல்வெட்டுகளையும் அமைத்துள்ளார். கற்பாறைகளைக் குடைந்து கோவில்களை அமைத்துள்ளார். அவைகளுக்கு ரதங்கள் என்று பெயர். பாண்டவர்கள் ரதங்களில் அங்கே வந்தார்களாம். அக் கல் வெட்டுகளெல்லாம் மிகவும் அற்புதமான வேலைப்பாடுகள் உள்ளனவாக இருக்கின்றன. அவைகளின் அழகைக் காணப் பல நாட்டு மக்கள் மஹாபலிபுரத்திற்கு வந்துகொண்டே இருக்கிறார்கள்.

பல்லவ அரசர்களில் சிலர் சைவ மதத்தையும், சிலர் வைஷ்ணவ மதத்தையும் பின்பற்றினர். தமிழ் வித்வான்களையும் சம்ஸ்கிருத பண்டிதர்களையும் அவர்கள் ஆதரித்தார்கள். திருஞானசம்பந்தர், அப்பர், சிறுத்தொண்டர் முதலான சிவ பக்தர்கள் அக்காலத்தில் வசித்துவந்தனர்.

கேள்விகள்

1. பல்லவர்கள் யார்? அவர்கள் எங்கே பரவி இருந்தார்கள்?
2. பல்லவத் தலைநகர் எது? அங்கே உள்ள விசேஷங்கள் யாவை?
3. பல்லவர்களின் முக்கிய அரசர்கள் யார்?
4. அவர்கள் காலத்தில் இருந்த பெரியார்கள் யார்?
5. பல்லவர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட நலன்கள் யாவை?

9. தமிழ் நாட்டு மன்னர்கள்

தமிழ் நாடு வடக்கே துங்கபத்திரா நதியிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையில் பரவி இருந்தது. அங்கே முன்காலத்தில் சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள் என்று மூன்று ராஜ்யங்கள் இருந்தன. இந்த பாகத்தையே தமிழகம் என்றும் சொல்லுவார்கள். இது நாகரிகம், கலைவளர்ச்சி, வியாபாரம் முதலியவைகளில் சிறந்த நாடாக இருந்தது.

சேர ராஜ்யம் :—அக்காலத்தில் சேர ராஜ்யம் என்பது மலையாளம், திருவாங்கூர், கொச்சி, கோயம்புத்தூர் முதலிய இடங்கள் அடங்கி இருந்தது. இதன் தலைநகரம் வஞ்சிமாநகரமாகும். இதையே கருவூர், கொடுங்கோளூர் என்றும் சொல்லுவார்கள். முசிரி, தொண்டி என்ற இரண்டு துறைமுகங்கள் இருந்தன. அவைகளின் வழியாக மிளகு, அரிசி, மரம், வாசனைத் திரவியங்கள் முதலியன ஏற்றுமதியாகின. பாரசீகம், அரேபியா, இத்தாலி முதலிய தேசங்களோடு சேர அரசர்கள் வியாபாரம் செய்தார்கள்.

சேர அரசர்கள் எல்லோரும் தமிழ் அன்பர்கள். மலையாள பாஷை அக்காலத்தில் இல்லை. சேர நாட்டை ஆண்ட அரசர்களில் சிறந்தவர் சேரன் செங்குட்டுவன் என்பவர். இவர் சோழ பாண்டிய அரசர்களை வென்றார். இவர் இமயமலை வரையில் படையெடுத்துச் சென்றார். அங்கிருந்து கற்கள் கொண்டுவந்து இவர் தம் நாட்டில் கண்ணகிக்கு ஓர் கோவில் கட்டினர். அதற்குப் பத்தினிக் கோவில் என்று பெயர். இவர் தம்பி இளங்கோவடிகள் என்பவர்தான் சிலப்பதிகாரம் என்னும் சிறந்த தமிழ்க் காவியத்தின் ஆசிரியர்.

சேர நாட்டில் பல கைத்தொழில்கள் நடைபெற்று வந்தன. விவசாயம், வியாபாரம், நூல் நூற்றல், நெய்தல் முதலிய தொழில்களில் அவர்கள் சிறந்தவர்களாக இருந்தார்கள். கப்பல் தொழிலும், உப்புக் காய்ச்சுவதும் அவர்களுக்குத் தெரிந்து இருந்தன. இவ்வாறு சிறந்திருந்த சேர நாட்டின் பெருமை குன்றி அது அழிந்து விட்டது.

சோழ ராஜ்யம்:—சோழ நாடு வடபெண்ணை முதல் தெற்கே தஞ்சாவூரில் வெள்ளாறு வரையில் பரவி இருந்தது. இந்நாட்டின் தலைநகரம் உறையூர். பிற்காலத்தில் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டார்கள். காவிரிப்பூம்பட்டினம் இந்த ராஜ்யத்தின் முக்கிய துறைமுகம். அதற்கு புகார் என்ற வேறு பெயரும் உண்டு. சோழ அரசர்களில் முதல் அரசராகிய கரிகால் சோழன் என்பவரால் இத் துறைமுகம் ஏற்பட்டது. இவர் முதல் நூற்றுண்டில் இருந்தார். அவருக்குப் பிறகு ஒன்பதாம் நூற்றுண்டு வரையில் சோழ அரசர்களின் வரலாறு ஒன்றும் தெரியவில்லை.

பிறகு கி. பி. 907-ல் பராந்தகர் என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவர் பல்லவர்களையும் பாண்டியர்களையும் வென்றுர். அவருக்குப் பின் கி. பி. 985-ல் ராஜராஜ சோழர் என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் மிகவும் பராக்கிரமசாலி. இவர் சேரர், சாளுக்கியர், பாண்டியர்கள் முதலியவர்களை வென்று தம் நாட்டைப் பெருக்கினுர். வெங்கி, குடகு, சிம்மளத் தீவு இவர் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டன.

இவர் சிறந்த கல்விமான், இவர் புலவர்களையும் சிற்பிகளையும் ஆதரித்தார். தஞ்சாவூரிலுள்ள பிரக

தீஸ்வரர் கோவில், வட ஆற்காட்டிலுள்ள மேற்பாடி என்னும் கிராமத்திலுள்ள சோமேஸ்வரர் கோவில்,



தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில்

திருவையாற்று லோகமகாதேஸ்வரர் கோவில் முதலியவை இவர் கட்டியவைகளாகும். இவர் கி. பி.

1017-ல் மரணமடைந்தார். இவர் ஆட்சியில் குடிகள் க்ஷேமமாகவும் சந்தோஷமாகவும் இருந்தனர்.

இவருக்குப் பின் இவர் மகன் இராஜேந்திர சோழன் பட்டத்திற்கு வந்தார். இவர் மிகவும் பராக்கிரமசாலி. இவர், அந்தமான், நிகோபார் என்ற தீவுகளையும் பெகு நாட்டையும் வென்றார். இவர் வட இந்தியாவின் மேல் படையெடுத்துச் சென்று கங்கை நதிக் கரையிலுள்ள நாடுகளை ஜெயித்தார். ஆகவே அவருக்கு கங்கை கொண்ட சோழன் என்று பெயர் ஏற்பட்டது

திருச்சிக்கு அருகிலுள்ள கங்கைகொண்ட சோழபுரம் என்ற ஊர் அவரால் கட்டப்பட்டது. அங்கே ஓர் அழகிய கோவிலையும் ஏரியையும் அவர் உண்டாக்கினர். அவர் காலத்தில் நாட்டில் அமைதி ஏற்பட்டது. கல்வி அபிவிருத்தி அடைந்தது.

இராஜேந்திர சோழனுக்குப் பிறகு இரண்டு சோழ அரசர்கள் பட்டத்துக்கு வந்தார்கள். இவர்களில் கடைசி அரசனை கி. பி. 1074-ல் யாரோ கொலை செய்து விட்டார்கள். ஆகவே இராஜேந்திர சோழனின் பெண் வயிற்றுப் பேரர் குலோத்துங்கர் சோழ நாட்டு அரசரானர். இவர் சாளுக்கிய வம்சத்தில் வந்தவர். இவர் தந்தை வெங்கி நாட்டு அரசராகிய ராஜா நரேந்திரர் என்பவர். ஆகவே குலோத்துங்கரையும் அவர் சந்ததியாரையும் சாளுக்கிய சோழர்கள் என்று கூறுகிறார்கள்.

சோழ அரசர்களில் குலோத்துங்கர் மிகவும் மேன்மையானவர். இவர் விவசாயிகளுக்கு வேண்டிய பல நன்மைகள் செய்தார். இவர் காலத்தில் குடிகள் சந்தோஷமாகவும் சமாதானத்துடனும் வாழ்ந்து

வந்தார்கள். இவர் பஞ்ச காலத்தில் வரிகளைக் குறைப்பது வழக்கம். இவர் அநேக கால்வாய்களையும் குளங்களையும் வெட்டி நீர் வசதிகள் செய்தார். கலிங்கத்துப் பரணி என்ற நூலில் இவரது குணங்களைப் பற்றி விசேஷமாகக் கூறப்பட்டுள்ளது. இவருக்குப் பின் சோழநாடு சீர்குலைந்து கடைசியில் முகம்மதியர்கள் வசமாயிற்று.

பாண்டிய ராஜ்யம்:—காவிரி நதிக்குத் தெற்கே மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி என்ற ஜில்லாக்களும், திருவாங்கூர், புதுக்கோட்டை சமஸ்தானங்களின் சில பாகமும் சேர்ந்து பாண்டிய நாடாக இருந்தது. இதன் தலைநகரம் மதுரை. இங்கே தமிழ்ச் சங்கங்கள் மூன்று சிறந்து விளங்கின. கொற்கை அதன் துறைமுகப்பட்டினம். இது தாமிரபரணி நதி கடலில் விழும் இடத்திலுள்ளது. இதனருகே முத்துக் குளித்தல் விசேஷமாக நடந்துவந்தது.

பாண்டிய அரசர்களில் மிகவும் புகழ்பெற்றவர் நெடுஞ்செழியன் என்பவர். இவர் கி. பி. 620 முதல் 650 வரையில் ஆண்டார். இவர் மிகுந்த பராக்கிரம சாலி. இவர் சேர அரசரையும், சோழ அரசரையும் வென்றார். இவருக்குப் பின் பட்டத்துக்கு வந்தவர் மாறவர்மன் என்பவர். இவரும் மிகவும் பராக்கிரம சாலி. இவர் சோழ அரசரைப் பன்முறை பல இடங்களில் தோற்கடித்தார். இவர் சமணராகமாறிப் பிறகு சைவரானார். இவருக்குப் பின் பல பாண்டிய அரசர்கள் மதுரையில் ஆண்டார்கள். இவர்களில் முக்கியமானவர் ஜடாவர்மன்.

இவர் கி. பி. 1251-ல் பட்டத்துக்கு வந்தார். இவர் காலத்தில் பாண்டிய நாடு வடக்கே நெல்லூர் வரையில் பரவி இருந்தது. இவர் சேரர்களையும்

சோழர்களையும் வென்ருர். இவர் இலங்கையையும் வென்ருர். இவர் காவேரிக் கரையில் அநேக மண்டபங்களையும், வேறு கட்டிடங்களையும் கட்டினர். இவர் ஸ்ரீ ரங்கப்பெருமாள் கோவில் கோபுரத்தைப் பொன்னல் வேய்ந்தார். இவர் கி. பி. 1271-ல் இறந்தார்.

இவருக்குப் பின்வந்த சிறந்த அரசர் மாறவர்மன் குலசேகரபாண்டியன். இவருக்கு சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்று இரு பிள்ளைகள் உண்டு. அவர் வீரபாண்டியரை தமக்குப்பின் அரசராக்கினர். அதனல் கோபமடைந்த சுந்தரபாண்டியன் தன் தந்தையைக் கொன்று தாமே அரசரானர். வீரபாண்டியன் ஓர் சேனையுடன் சுந்தரரை எதிர்த்தார். சுந்தரர் டில்லி சுல்தானகிய அல்லாவுத்தீனிடத்தில் சரண் புகுந்தார். இச்சமயத்தில்தான் அல்லாவுத்தீனின் சேனைத் தலைவன் மாலிக்காபூர் தென் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தார். இவர் மதுரையில் வீரபாண்டியனல் தோற்கடிக்கப்பட்டார். ஆனலும் பாண்டிய ராஜ்யம் க்ஷீணதசை அடைய ஆரம்பித்தது.

கொஞ்ச காலம் கழித்து இந்நாடு விஜயநகரராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. விஜயநகர ராஜ்யம் அழிந்த பிறகு மதுரை பாண்டிய ராஜ்யம் நாயக்க அரசர்கள் கைவசம் வந்தது. நாயக்க அரசர்களில் முக்கியமானவர் திருமலைநாயக்கர். இவர் மதுரையில் மிகவும் அழகான திருமலைநாயக்கர் மஹால், பெரிய தெப்பக்குளம், புதுமண்டபம் முதலியவைகளைக் கட்டினர்.

தமிழ் அரசர்களின் ஆட்சி:— தமிழ் மூவேந்தர்களும் தங்களுடைய ராஜ்யத்தைப் பல மண்டலங்

களாகப் பிரித்து, ஒவ்வோர் மண்டலத்திலும் ஓர் தலைவனை ஏற்படுத்தினர்கள். அவனுக்குக்கீழ் அநேக உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். கிராமங்களில் பஞ்சாயத்து சபைகள் இருந்தன. அரசர்கள் ஆறில் ஓர் பங்கை வரியாக வாங்கினர்கள். நீர்ப்பாசன வசதிகள் செய்தார்கள். அவர்களிடம் ஓர் கப்பற் படையும் இருந்தது.



திருமலை நாயக்கர் மஹால்

தமிழ் அரசர்கள் காலத்தில் தமிழ்க் கல்வி மிகவும் மேன்மை அடைந்திருந்தது. சிறந்த பண்டிதர்களும் கவிவாணர்களும் அரசர்களால் ஆதரிக்கப்பட்டார்கள். கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்கள் இக் காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். பாண்டிய அரசர்கள் தமிழ்ப் புலவர்கள் கூடிய தமிழ்ச் சங்கத்தை நடத்திவந்தார்கள். அக்காலத்தில்

சிறந்த தமிழ் நூல்கள் ஏற்பட்டன. அவைகளில் முக்கியமானவை திருக்குறள், சிலப்பதிகாரம். திருக்குறளை எழுதியவர் தெய்வப் புலவராகிய திருவள்ளுவர்.

மக்கள் ஆடம்பரமின்றி சுகமாக வாழ்ந்து வந்தார்கள். வேளாண்மை, நெசவு, கப்பல் கட்டுதல், வியாபாரம், சிற்பம் முதலியவைகளில் சிறந்து விளங்கினர்கள். அவர்கள் எகிப்து, கிரீஸ், இத்தாலி முதலிய தேசங்களுடன் வியாபாரம் செய்தனர். எனினும் தமிழ் மூவேந்தர்களுக்குள் ஒற்றுமை கிடையாது. ஆகவே அவர்கள் ராஜ்யம் எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருப்பினும் கடைசியில் சீர்குலைந்து விட்டது.

கேள்விகள்

1. தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
2. சேர நாட்டின் தலைநகர், துறைமுகம் யாவை?
3. சோழ நாட்டுச் சிறந்த அரசர்கள் யார்?
4. குலோத்துங்கன் ஆட்சி எவ்வாறு மேன்மையானது?
5. பாண்டிய நாட்டில் ஆண்ட அரசர்களில் சிறந்தவன் யார்?
6. பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்து வந்த முகம்மதியர் யார்?
7. திருமலை நாயக்கர் யார்? அவர் எவ்வாறு புகழ் பெற்றார்?
8. தமிழ் அரசர்கள் ஆண்ட காலம் எவ்வாறு சிறப்பு வாய்ந்தது?
9. இக்காலத்தில் ஏற்பட்ட தமிழ் நூல்கள் யாவை?

10. சந்திரகுப்த விக்கிரமாதித்தர்

வட இந்தியாவில் அசோகருக்குப்பின் மௌரிய வம்சம் க்ஷீணதசை அடைந்தது. மகத ராஜ்யமும் அழிந்து விட்டது. பல சிறு ராஜ்யங்கள் தோன்றி மறைந்தன. சுமார் 500 வருஷங்கள் வரையில் அங்கே ஓர் பெரிய ராஜ்யம் தோன்றவில்லை. கி. பி. நாலாவது நூற்றாண்டில் ஓர் அரச வம்சம் தோன்றியது. அதற்கு குப்த வம்சம் என்று பெயர். இவ் வம்சம் ஸ்ரீகுப்தர் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. இவரது பேரர் சந்திரகுப்தர் காலத்தில்தான் குப்த ராஜ்யம் மேன்மை அடைந்தது.

சந்திர குப்தர் லிச்சவி வம்சத்து இளவரசியாகிய குமார தேவியை மணந்தார். ஆகவே லிச்சவி நாடும் அவருக்கு ஸ்ரீதனமாகக் கிடைத்தது. தம் தலை நகராகிய பாடலிபுரத்தை அவர் மிகவும் அழகுபடுத்தினார். வட இந்தியாவின் பெரும் பாகம் அவருடைய அதிகாரத்தின் கீழ் வந்தது. அவர் மிகவும் மேன்மையாக கி. பி. 330 வரையில் ஆண்டார்.

அவர் மரணத்திற்குப் பிறகு அவர் மகன் சமுத்திரகுப்தர் அரசரானார். இவர் சுமார் 50 வருஷ காலம் அரசாண்டார். இவர் சிறந்த போர் வீரர். நல்ல தைரியமும் வீரமும் பொருந்தியவராக இருந்தார். இவர் பல நாடுகளின்மேல் படையெடுத்துச் சென்று, அவைகளை வென்றார். இவரது வெற்றிக்கு அடையாளமாக ஓர் அசுவமேத யாகம் செய்தார். இவர் கல்வியிலும் சங்கீதத்திலும் தேர்ச்சிபெற்று இருந்தார்.

இவருக்குப் பின் இவர் குமாரர் இரண்டாம் சந்திரகுப்தர் அரசரானார். இவர் மிகவும் பராக்

கிரமசாலி. ஆகவே இவருக்கு விக்கிரமாதித்தர் என்ற பெயரும் உண்டு. இவர் கி. பி. 375 முதல்



குப்த ராஜ்யம்

413 வரையில் ஆண்டார். இவர் மாளவம், கூர்ஜரம்

முதலிய நாடுகளை வென்று தம் நாட்டோடு சேர்த்துக் கொண்டார். இவருடைய தலைநகரம் உஜ்ஜயினி என்பது. அங்கே பல நாட்டு வியாபாரிகளும் கல்விமான்களும் கூடியிருந்தார்கள். இவர் நியாயம் தவருமல் ஆண்டார். சிற்பம், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளில் மக்கள் மேன்மை அடைந்திருந்தார்கள்.

இவர் காலத்தில் பௌத்த மதம் க்ஷீணதசை அடைந்து இந்து மதம் மேன்மை அடைந்தது. எல்லோரும் தங்கள் தங்கள் மதத்தைக் கட்டுப்பாடின்றி பின்பற்றிவந்தார்கள். நாட்டில் இந்துக்களுக்கும் புத்தர்களுக்கும் பல ஆலயங்கள் ஏற்பட்டன. மடங்கள் பல ஏற்பட்டு, நாட்டில் கலைவளர்ச்சியும், கல்வி வளர்ச்சியும் ஏற்பட்டன.

விக்கிரமாதித்தர் சமஸ்தானத்தில்பல சம்ஸ்கிருத வித்வான்கள் இருந்தார்கள். அவர்கள் பல நூல்களை எழுதினர்கள். அவர்களுக்கு நவரத்தினங்கள் என்று பெயர். அவர்களில் புகழ்பெற்றவர் காளிதாஸர் என்பவர். அவர் சாகுந்தலம், ரகு வம்சம், குமார சம்பவம் முதலிய சிறந்த நூல்களை எழுதினர். அமரசிம்ஹர் என்ற கவியும், தன்வந்திரி என்ற வைத்தியரும், வராஹ மிஹிரர் என்ற வான சாஸ்திரியும் அக் காலத்தில் வாழ்ந்தனர். இன்னும் பல சங்கீத வித்வான்களையும், சிற்ப சாஸ்திரிகளையும், கணித சாஸ்திரிகளையும் சந்திரகுப்தர் ஆதரித்தார்.

விக்கிரமாதித்தர் காலத்தில் பாஹியன் என்ற சீன யாத்திரி ஒருவர் இந்தியாவில் பல வருஷங்கள் தங்கியிருந்தார். அவர் புத்த புண்ணிய பூமியாகிய இந்தியாவைப் பார்க்க வந்தார். அவர் பல இடங்களுக்குச் சென்று இந்தியர்களின் வாழ்க்கையைப் பற்றி

எழுதியிருக்கிறார். ஜனங்கள் சந்தோஷமாகவும், சமாதானத்துடனும் வாழ்ந்தார்கள் என்றும், திருட்டு, கொலை முதலியவைகள் கிடையாதென்றும் பாஹியன் எழுதியிருக்கிறார். குப்த அரசர்கள் ஆண்ட காலத்தில் நாடு பலவகையில் மேன்மை அடைந்திருந்தபடியால் அக்காலத்தைப் பொற்காலம் என்று அழைக்கிறார்கள்.

கேள்விகள்

1. குப்த வம்சத்து முதல் மூன்று அரசர்கள் யார்?
2. அவர்களில் சிறந்த அரசன் யார்? ஏன் சிறந்தவன்?
3. விக்கிரமாதித்தர் ஆட்சி எவ்வாறு மேன்மை யானது?
4. அவர் காலத்து வித்வான்கள் யார்?
5. பாஹியன் யார்? அவர், ஆட்சியைப் பற்றி என்ன சொல்லுகிறார்?

---

11. கஜினி மஹ்மூது

அரேபியாவில் முகம்மதிய மதம் தோன்றிய பிறகு, துருக்கி, பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய இடங்களில் அம் மதம் பரவியது. கி. பி. பத்தாவது நூற்றாண்டில் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த துருக்கியர்கள் ஆப்கானிஸ்தானத்தை ஆண்டுவந்தார்கள். அவர்களுடைய ராஜதானி கஜினி. அவ்வூரில் அரச வம்சத்தை ஸ்தாபித்தவர் ஸபக்டிஜின் என்பவர்.

ஸபக்டிஜின் தம் ராஜ்யத்தை பல திசைகளிலும் பரவச் செய்தார். கிழக்கில் பஞ்சாபிலிருந்த ஜய

பாலரை அவர் இருமுறை தோற்கடித்தார். அவருடைய புதல்வர்தான் மஹ்மூது என்பவர். அவர் கி. பி. 997-ல் கஜினி ராஜ்யத்திற்கு அரசரானர்.

அக் காலத்தில் நமது நாடு செல்வம் நிறைந்த நாடாக இருந்தது. வியாபாரமும் கைத்தொழிலும் அதிகரித்திருந்தன. கங்கைச் சமவெளியில் பல பெரிய நகரங்களும், செல்வம் நிறைந்த பல கோவில்களும் ஏற்பட்டிருந்தன. இந்தியர்கள் மேல் நாட்டோடு ஒட்டக மார்க்கமாக வியாபாரம் செய்து வந்தனர். சிறுவயதிலேயே மஹ்மூது இந்திய வியாபாரிகளிடமிருந்து இந்தியாவின் செல்வத்தைப் பற்றியும் கோவில்களைப் பற்றியும் கேள்வியுற்ருர். ஆகவே இந்தியாவின்மேல் படை யெடுத்து, செல்வத்தை அபகரிக்க எண்ணம் கொண்டார்.

மஹ்மூது ஓர் சிறந்த வீரர். போர் செய்வதில் மிகவும் விருப்பமுள்ளவர். ஊக்கமும் விடாமுயற்சியும் உடையவர். அவர் தாம் நினைத்த காரியத்தை செய்தே தீருவார். அவர் மத்திய ஆசியாவில் ஓர் பெரிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும், முகம்மதிய ராஜ்யத்தை ஏற்படுத்தவும் தீர்மானித்தார். ஆகவே அவர் இந்தியாவின்மேல் பலமுறை படையெடுத்தார்.

அப்போது வட இந்தியாவில் பஞ்சாபில் ஜயபாலர் என்ற அரசர் ஆட்சிசெய்து வந்தார். அவர் மஹ்மூதுவுடன் கடும்போர் செய்தார். அவருக்குப் பின் அவர் புதல்வரும் போர் செய்தார். ஆனல் எல்லா போர்களிலும் மஹ்மூதுவே வெற்றி பெற்ருர். பின்பு மஹ்மூது தானேஸ்வரத்தைக் கொள்ளையிட்டார். பிறகு இமயமலைச் சாரலில் உள்ள நாகர் கோட்டையைத் தாக்கி அங்கிருந்த செல்வத்தைக்

கொள்ளேயிட்டார். அதன் பிறகு கன்னேசி அரசனே வென்று அவ்வூரையும் கொள்ளேயிட்டார்.

கடைசியாக கி. பி. 1024-ல் அவர் கூர்ஜர நாட்டின்மேல் படையெடுத்து வந்தார். அங்கேயுள்ள சோமநாதர் கோவிலேக் கொள்ளேயடிக்கவே அவர் வந்தார். அக்கோவில் மிகவும் பிரசித்திபெற்றது. ஏராளமான செல்வம் நிறைந்திருந்தது. இந்துக்கள் தங்கள் கோவிலேக் காக்க ஆயுதம் பூண்டார்கள். மஹ்மூது தன் சேனேயுடன் கோவிலேச் சூழ்ந்து கொண்டார். இருவருக்கும் நடந்த யுத்தத்தில் மஹ்மூதுவே வெற்றி அடைந்தார். இந்துக்கள் மஹ்மூதை கோவிலே இடிக்காமல் இருக்கும்படி வேண்டினர். அவருக்குத் தாங்கள் ஏராளமாகப் பணம் கொடுப்பதாகக் கூறினர். ஆனல் மஹ்மூது இதற்கு இணங்கவில்லே. அவர் கோவிலுக்குள் நுழைந்து விக்கிரகங்களே உடைத்து அங்கிருந்த பொருள்களே எல்லாம் கொள்ளே அடித்துக்கொண்டு கஜினிக்குச் சென்ருர்.

இந்தியாவிலிருந்து கொள்ளே அடித்துச் சென்ற பொருள்களேக்கொண்டு அவர் தலேநகரமாகிய கஜினியை அழகுபடுத்தினர். பல பெரிய மாளிகைகளும், அரண்மனேகளும் கட்டப்பட்டன. பல அழகான மசூதிகளேக் கட்டினர். மஹ்மூது ஓர் சிறந்த கல்விமான். கஜினியில் அவர் ஓர் சர்வகலாசாலேயும், ஓர் புத்தகசாலேயும், கண்காட்சிசாலேயும் ஏற்படுத்தினர். அவர் சமஸ்தானத்தில் பல வித்வான்கள் கூடி இருந்தார்கள். இவ்வாறு மேன்மையாக ஆட்சிசெய்து மஹ்மூது கி. பி. 1030-ம் வருஷம் மரண மடைந்தார்.

கேள்விகள்

1. கஜினி மஹ்மூதுவுக்கு இந்தியாவின் செழுமை எவ்வாறு தெரிந்தது?
2. அவர் நோக்கம் என்ன? எவ்வாறு அதை நிறைவேற்றினர்?
3. கஜினி கொள்ளை யடித்த கோவில்கள் யாவை?
4. கஜினியின் மேன்மை யாது?

---

12. முகம்மது கோரி

கஜினி ராஜ்யம் மஹ்மூதுவுக்குப் பிறகு பெருமை இழக்க ஆரம்பித்தது. வடக்கிலிருந்து ஓர் துருக்கிய கூட்டம் அவருடைய ராஜ்யத்தைத் தாக்கியது. மஹ்மூது இறந்த 100 வருஷங்களுக்குள்ளாக அவர் ராஜ்யம் அழிந்துவிட்டது. பிறகு கோர் என்னும் நகரத்தில் ஓர் புகழ்பெற்ற குடும்பத்தார் அரசாட்சியை ஏற்படுத்தினர். கோர் வம்சத்தாரில் முகம்மது கோரி என்பவரே முதல் அரசர்.

இவர் குஸ்ரு என்னும் கடைசி கஜினி அரசனை வென்று கஜினி ராஜ்யத்தைத் தமதாக்கிக் கொண்டார். இவர் இந்தியாவில் ஓர் ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பினர். இவர் ஆண்மையும் வீரமும் பொருந்தியவர். இந்தியாவின்மேல் படையெடுக்கத் தக்க சமயம் பார்த்திருந்தார். வட இந்தியாவில் ஆண்ட ராஜபுத்திரர்களுக்குள் ஒற்றுமையின்றிக் கலகங்கள் ஏற்பட்டன. இதைக் கோரி பயன்படுத்திக் கொண்டார்.

அக் காலத்தில் வட இந்தியாவில் ஆண்ட அரசர்களுள் கன்னோசி அரசராகிய ஜயச்சந்திரனும், டில்லி,

ஆஜ்மீர் அரசராகிய பிருதிவி ராஜனும் முக்கியமான வர்கள். அவர்களுக்குள் விரோதமும் பொருமையும் ஏற்பட்டிருந்தன. ஜயச்சந்திரனுக்கு எப்படியாவது பிருதிவி ராஜனைத் தோற்கடித்து அவமானப்படுத்த வேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. ஆகவே தமக்கு உதவி செய்ய முகம்மது கோரியை அழைத்தார். இவ்வித சந்தர்ப்பத்தை ஆவலுடன் எதிர்பார்த்த கோரி, உடனே 1190-ல் இந்தியாவின் மேல் ஓர் பெரும் சேனையுடன் படையெடுத்து வந்தார்.



கோரி முகம்மது

பிருதிவிராஜன் போருக்குத் தயார் ஆனார். ஜயச்சந்திரன் தவிர மற்ற எல்லா ராஜபுத்திர அரசர்களும் தங்கள் தாய்நாட்டைக் காக்க பிருதிவியுடன் சேர்ந்து கொண்டார்கள். கி. பி. 1191-ல் கோரிக்கும் பிருதிவிக்கும் தானேஸ்வரம் என்னுமிடத்தில் போர் நடந்தது. இப்போரில் பிருதிவியே வென்றார். கோரி சிறை செய்யப்பட்டார். பிறகு பிருதிவி அவரை விடுதலை செய்தார். இவ்வாறு பிருதிவி கோரியை ஏழு முறை தோற்கடித்துச் சிறைப் பிடித்து, கடைசியில் விடுதலை செய்தார்.

அவமானமடைந்த கோரி, தன் நாட்டுக்குத் திரும்பி தோல்வி அடைந்த தம் வீரர்களை எல்லாம் தெருக்களில் குதிரை தீனி தின்பதுபோல் கழுத்தில் கோதுமைப் பைகளை மாட்டித்திரியும்படி செய்து அவமானப்படுத்தினர். கடைசியாக கோரி கி. பி. 1192-ல் ஒரு பெரும் சேனையுடன் இந்தியாவிற்கு வந்தார். பிருதிவிராஜனிடத்தில் பொறாமை கொண்ட சில ராஜபுத்திரர்கள் கோரியுடன் சேர்ந்துகொண்டார்கள். தானேஸ்வரத்தில் மறுபடியும் யுத்தம் நடந்தது. பிருதிவியின் சேனைத் தலைவன் ஒருவன் துரோகம் செய்து கோரிக்கு உதவி செய்தான். கோரி வெற்றி அடைந்தார். பிருதிவி யுத்த களத்திலேயே மாண்டார்.

அடுத்தபடியாக கோரி தன்னை வரவழைத்து உறவுகொண்டாடிய ஜயச்சந்திரனையே தோற்கடித்து அவர் ராஜ்யத்தை அபகரித்தார். ஜயச்சந்திரன் அவமானமடைந்து கொலையுண்டார்.

தாம் இந்தியாவில் ஜயித்த நாடுகளுக் கெல்லாம் தம்முடைய சேனாதிபதியான குத்புதீன் என்பவரை அதிகாரியாக நியமித்தார். குத்புதீன் வேறு சில ராஜ்யங்களையும் ஜயித்து கோரியின் ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்தினர். பிறகு கோரி இறந்ததும் குத்புதீன் அரசரானர். அவர்தான் டில்லியில் ஆண்ட முதல் சுல்தான். அவர் சந்ததியார்கள் பல ஆண்டுகள் டில்லியில் ஆண்டார்கள்.

கேள்விகள்

1. முகம்மது கோரி ஏன் இந்தியாவின்மேல் படையெடுத்தார்?
2. அவருக்கு என்ன அனுகூலமான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன?

3. முதலில் கோரி தோற்றதற்குக் காரணமென்ன?
4. தானேஸ்வர யுத்தம் யார் யாருக்கும் நடந்தது? அதன் முடிவு என்ன?
5. குத்புதீன் என்பவர் யார்? அவரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

---

13. மூன்று மதாச்சாரியார்கள்

நம் நாட்டின் பழமையான மதம் இந்து மதமே யாகும். இதற்குப் போட்டியாக பல மதங்கள் தோன்றலாயின. அவைகளில் முக்கியமானவை பௌத்த மதமும் சமண மதமுமாகும். ஆகவே இந்து மதம் க்ஷீணிக்க ஆரம்பித்தது. அசோகர் காலத்தில் பௌத்த மதம் மிகுந்த செல்வாக்குப் பெற்றது. ஜனங்களுக்கு இந்து மதத்தில் நம்பிக்கை குறைந்தது. பிறகு குப்தர்கள் காலத்தில் இந்து மதம் மறுபடியும் புத்துயிர் பெற்றது. பல இந்துக் கோவில்கள் கட்டப்பட்டன. புராணங்கள் எழுதப்பட்டன. பிறகு பல நாயன்மார்கள் தோன்றி மக்களுக்கு இந்துமதத்தில்பற்று உண்டாகும்படிச் செய்தார்கள். தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய மத நூல்கள் அப்போதுதான் ஏற்பட்டன. நாயன்மார்கள், ஆழ்வார்கள் போலவே சிலமதாச்சாரியார்களும் தோன்றி இந்து மதத்தின் கொள்கைகளை ஜனங்களுக்கு உபதேசித்தனர். அவர்கள் ஸ்ரீசங்கரர், ராமானுஜர், மத்துவர் எனப்படுவார்கள். அவர்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் வசித்தார்கள்.

ஸ்ரீசங்கராச்சாரியார்:—ஸ்ரீசங்கரர் சுமார் 1150 வருஷங்களுக்குமுன் வாழ்ந்தவர். இவர் மலையாளம் ஜில்லாவில் காலடி என்னும் கிராமத்தில் ஓர் ஏழை

நம்பூத்திரி பிராமணர் வயிற்றில் பிறந்தவர். இவர் சிறு வயதிலேயே தம் தந்தையை இழந்தார். ஆயினும் தம் பதினறு வயதுக்குள்ளேயே எல்லா சாஸ்திரங் களையும் கலைகளையும் கற்றுணர்ந்தார். பிறகு அவர் தம் தாயின் உத்திரவு பெற்று சன்னியாசியாகிக் காசிக்குச் சென்ருர். காசி, காஷ்மீரம் முதலிய இடங்



ஸ்ரீமத் சங்கராச்சாரியார்

களிலுள்ள பெரியோர்களை நாடி அநேக உண்மை களை அறிந்தார். பிறகு இவர் பல இடங்களுக்குச் சென்று மற்ற மதஸ்தர்களுடன் தர்க்கம் செய்து வென்ருர். இந்து மதத்திற்கு ஆதாரமான வேதம், பகவத்கீதை முதலியவைகளுக்கு அவர் உரை எழு தினர். கடவுள்பேரில் பல ஸ்தோத்திரங்களை இயற்றி னர். தாம் செய்த வேலைகளும் தம் கொள்கை களும் நாட்டில் பரவுவதற்கு பல மடங்களை ஏற்

படுத்தினர். காஞ்சீபுரத்தில் காமகோடி மடத்தையும் மைசூரிலுள்ள ஸ்ரீருங்கேரியில் சாரதா மடத்தையும் ஏற்படுத்தினர். அவர் உபதேசித்த மதத்திற்கு ஸ்மார்த்த மதம் அல்லது அத்வைத மதம் என்று பெயர். ஸ்ரீ சங்கராச்சாரியார் தம்முடைய முப்பத்திரண்டாம் வயதில் முக்தி அடைந்தார்.

ஸ்ரீ ராமானுஜாச்சாரியார்:—இவர் வைஷ்ணவ சமயாச்சாரியார்களுக்குள் சிறந்தவர். இவர் ஸ்ரீ சங்கரருக்குப் பிறகு சுமார் 250 வருஷங்கள் கழித்து அவதரித்தார். அவர் சென்னைக்கு அருகே 25 மைல் மேற்கேயுள்ள ஸ்ரீபெரும்பூதூரில் பதினேராம் நூற்ருண்டில் பிறந்தார். அக் காலத்தில் காஞ்சீபுரம் ஒரு பெரியகல்வி பீடமாக இருந்தது. ஆகவே ஸ்ரீ ராமானுஜர் அங்கே சென்று யாதவப் பிரகாசர் என்ற ஓர் குருவை அடைந்தார். அவரிடத்தில் எல்லா சாஸ்திரங்களையும் வேதங்களையும் நன்கு கற்ருர். அவர் வெகு சீக்கிரத்தில் குருவைக் காட்டிலும் மேலான ஞானத்தைப்



ஸ்ரீமத் ராமானுஜர்

பெற்ருர். ஆகவே குருவுக்கு அவர் மேல் பொருமை ஏற்பட்டது. உடனே ராமானுஜர் ஸ்ரீரங்கம் சென்ருர். கொஞ்ச காலம் கழித்து காஞ்சிக்குத் திரும்பி வந்து இல்லறம் நடத்தினர். பிறகு துறவியானர். எல்லாத் துறவிகளிலும் அவர் சிறந்தவராகையால் அவரை யதிராஜர் என்று அழைக்கலானர்கள்.

ஸ்ரீராமானுஜர் கொஞ்ச காலம் கழித்து ஸ்ரீரங்கம் சென்று அங்கே வசிக்கலானர். அப்போது சோழ நாட்டில் குலோத்துங்க சோழன் ஆண்டு வந்தார். அவர் சைவ மதத்தில் மிகுந்த பற்றுள்ளவர். ஆகவே அவர் ராமானுஜரை இம்சிக்கத் தொடங்கினர். அதனல் ராமானுஜர் ஸ்ரீரங்கத்தைவிட்டு மைசூருக்குச் சென்ருர். அங்கே ஆண்டுவந்த பிட்டிதேவர் என்ற அரசர் ராமானுஜரை ஆதரித்துத் தாமும் வைஷ்ணவ மதத்தைத் தழுவினர். குலோத்துங்கன் இறந்த பிறகு மறுபடியும் ராமானுஜர் அரங்கம் திரும்பினர். அங்கே பல சிஷ்யர்களை வைத்துக் கொண்டு மத உபதேசம் செய்து வந்தார்.

பக்தியினுலும் கர்மத்தினுலும் மோக்ஷத்தை அடையலாம் என்பது இவரது கொள்கை. இவரது மதக் கொள்கைக்கு விசிஷ்டாத்வைதம் என்று பெயர். இவரும், வேதத்திற்கும் கீதைக்கும் பாஷ்யம் எழுதி யிருக்கிருர். ஸ்ரீ வைஷ்ணவர்கள் ராமானுஜரை உடையவர், பாஷ்யகாரர் என்ற பட்டப் பெயர்களால் இன்றும் பூஜித்து வருகின்றனர். ஸ்ரீ ராமானுஜர் தமது 120-ம் வயதில் வைகுண்டப் பிராப்தி அடைந்தார்.

ஸ்ரீமத்துவாச்சாரியார்:—ஸ்ரீமத்துவாச்சாரியார் பன்னிரண்டாம் நூற்ருண்டின் முடிவில் தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள உடுப்பி என்ற நகரில்

பிறந்தார். இங்கே ஓர் அழகிய கிருஷ்ணன் கோவில் இருக்கிறது. இவர் ராமானுஜருக்குப் பின் 100 வருஷங்கள் கழித்து அவதரித்தார். சங்கரரைப் போலவே இவரும் சிறு வயதிலிருந்தே எல்லா சாஸ்திரங்களையும் கற்று சன்னியாசி ஆனார். ஸ்ரீகிருஷ்ண பகவானைப் பக்தி செய்ய வேண்டு மென்பது இவரது முக்கிய கொள்கை. உடுப்பியிலுள்ள கோவில் இவரால் கட்டப்பட்டதே. இவரது கொள்கைகளுக்கு துவைதம் என்று பெயர். சங்கரருக்கும் இவருக்கும் கொள்கைகளில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. இவரும் பல நூல்களுக்கு பாஷ்யம் எழுதியிருக்கிறார். இவருடைய சிஷ்யர்களுக்கு மாத்வர்கள் என்ற பெயர் வழங்குகிறது. இவர்களுடைய புண்ணிய க்ஷேத்திரம் உடுப்பியாகும்.

ஸ்ரீமத்துவாச்சாரியார்

இம் மூன்று மதாச்சாரியார்களின் பெரு முயற்சியால் இந்து மதம் மறுபடியும் ஓங்க ஆரம்பித்தது. பௌத்த மதமும், ஜைன மதமும் க்ஷீணிக்க ஆரம்பித்தன.

கேள்விகள்

1. மூன்று மதாச்சாரியார்கள் யார்?
2. ஸ்ரீசங்கரர் எங்கே பிறந்தார்? அவர் எங்கே மடங்களை ஏற்படுத்தினர்?
3. ஸ்ரீராமானுஜர் எங்கே பிறந்தார்? அவரது குரு யார்? அவர் மதம் எது?
4. ஸ்ரீமத்துவர் எங்கே அவதரித்தார்?

---

14. விஜயநகர ராஜ்யம்

டில்லியில் முகம்மது துக்ளக் என்ற சுல்தான் அரசராக இருந்தபோது தக்ஷிணத்தில் பல ராஜ்யங்கள் இருந்தன. இவற்றுள் ஆனைக்குந்தி என்பது ஒன்று. இதை துக்ளக் வென்று தன் பிரதிநிதி ஒருவனை அங்கே அரசனாக்கினர். ஆனால் அவன் திறமையற்றவனாக இருக்கவே ஹரிஹரர், புக்கர் என்ற சகோதரர்களிடத்தில் அதை ஒப்புவித்தார்.

இவர்களே தங்கள் குருவான வித்தியாரண்யரின் ஆணைப்படி துங்கபத்திரையின் தென் கரையில் ஓர் நகரத்தை உண்டாக்கினர். அதுதான் வித்தியாரண்ய நகரம் என்ற விஜயநகரமாகும். அந்த நகரத்தைச் சுற்றி இருந்த பிரதேசங்களை அச்சகோதரர்கள் கைப்பற்றி ஓர் ராஜ்யத்தை ஏற்படுத்தினர்கள். முகம்மதியர்களைத் தெற்கில் வரவிடாமல் தடுக்கவும், இந்துக்களையும் இந்து தர்மத்தையும் பாதுகாக்கவும் அந்த நகரம் ஏற்பட்டது.

விஜயநகர அரசர்களில் மிகவும் புகழ்பெற்றவர் கிருஷ்ண தேவராயர். இவர் கி. பி. 1509 முதல்

1529 வரையில் அரசராக இருந்தார். இவர் காலத்தில்தான் விஜயநகர ராஜ்யம் மிகவும் பெரியதாயிற்று. இவர் பீஜப்பூர் சுல்தானுடன் போர்செய்து, ரெய்ச்சூர், முட்கால் என்ற கோட்டைகளைக் கைப்பற்றினர். மைசூர் உள்பட தென் இந்தியா முழுமையும் அவர் ஆட்சிக்கு உட்பட்டது.



விஜயநகர ராஜ்யம்

அவர் ஓர் சிறந்த கல்விமான். தெலுங்கு, சம்ஸ்கிருதம் ஆகிய இரண்டு பாஷைகளும் அவரால் நன்கு ஆதரிக்கப்பட்டு வந்தன. அல்லாசானி பெத்தண்ண, திம்மண்ண என்ற இரண்டு தெலுங்குக் கவிகள் அவர் சமஸ்தானத்தில் இருந்தார்கள். இன்னும் கிருஷ்ணதேவராயர் பல கோவில்களைக் கட்டி பூஜைக்காக நிலங்களை மானியமாகக் கொடுத்தார். விஜயநகரத்தில் ஆண்ட அரசர்களில் கிருஷ்ணதேவ ராயரே மிகவும் சிறந்தவர்.

கிருஷ்ணதேவராயருக்குப் பிறகு அவர் சகோதரர் அரசரானர். அவர் திறமையற்றவர். இவருக்குப் பின் சதாசிவராயர் அரசரானர். இவர் பெயருக்கு மாத்திரமே அரசரானர். எல்லா அதிகாரங்

களையும் இவர் மந்திரியாகிய ராமராயர் வகித்துவந்தார். இவர் மிகுந்த சாமர்த்தியம் உடையவர். வடக்கி லுள்ள முகம்மதிய ராஜ்ய விஷயங்களில் இவர் அடிக் கடி பிரவேசித்தார். முகம்மதியர்கள் இந்துக்களுக்

கிருஷ்ணதேவராயர்

குச் செய்த கொடுமைகளுக்கு அவர் பழிவாங்கத் தொடங்கினர். ஓர் முகம்மதிய ராஜ்யத்துக்கு விரோ தமாக வேறொன்றை ஏவினர். ஆகவே முகம்மதியர் கள் ஒன்று சேர்ந்து ஓர் பெரிய படையுடன் விஜயநக ரத்தைத் தாக்கவந்தனர்.

இதைக் கேள்வியுற்ற ராமராயர் ஒரு பெரும் படையைத் தயாரித்து முகம்மதியர்களை எதிர்க்கச் சென்றார். 1565-ம் ஆண்டில் தலைக்கோட்டை என்ற இடத்தில் இருவருக்கும் ஓர் கடும் போர் நடந்தது. ஆரம்பத்தில் ராமராயரே வெற்றி அடைவார்போல் தோன்றியது. ஆனால் கடைசியில் ராமராயர் அகமத் நகர் சுல்தானிடம் சிறைப்பட்டுக் கொல்லப்பட்டார். விஜயநகரம் இருந்த இடமே தெரியாமல் போயிற்று. இங்கேதான் இப்போது ஹம்பி என்ற சிறு கிராமம் இருக்கிறது.

கேள்விகள்

1. விஜயநகரத்தை ஏற்படுத்தியவர் யார்? எங்கே ஏற்படுத்தினர்?
2. அதற்கு வித்தியாரண்ய நகரம் என்று ஏன் பெயர் வந்தது?
3. விஜயநகர அரசர்களில் சிறந்தவர் யார்? ஏன் சிறந்தவர்?
4. தலைக்கோட்டை யுத்தம் ஏன் ஏற்பட்டது? எவ்வருஷம்? முடிவு என்ன?

---

15. முகலாய ஆட்சியை ஏற்படுத்திய பாபர்

டில்லியில் ஆண்ட துருக்கியர் வம்சத்தவர்களில் கடைசியானவர்கள் லோடி வம்சத்தினர். அதன் கடைசி அரசன் இப்ரஹீம் என்பவன். அவனுக்குப் பல விரோதிகள் இருந்தார்கள். இவர்கள் இப்ரஹீமை பட்டத்தினின்று விலக்கத் தீர்மானித்தார்கள். அப்போது பாபர் என்ற ஓர் மங்கோலியர் காபூலை

ஆண்டுவந்தார். லோடியின் சபையிலிருந்த பிரபுக்கள் பாபரை இந்தியாவின்மீது படையெடுத்து வரும் படி வேண்டினர்கள் பாபருக்கும் இந்தியாவில் ஓர் ராஜ்யத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் இருந்தபடியால் அவர் உடனே சம்மதித்தார்.

பாபர் கி. பி. 1494-ல் பர்கானு நாட்டுக்கு அரச ரானர். அப்போது அவருக்கு வயது பதினென்று. அவருக்கு அச் சிறு வயதிலேயே ஓர் பெரிய ராஜ் யத்தை ஆளவேண்டுமென்ற ஆசை உண்டு. பிறகு சாமர்க்கண்ட் என்ற நாட்டை வென்று அரசரானர். ஆனல் வெகு சீக்கிரத்தில் அவரது பகைவர்கள் அவரை விரட்டிவிட்டனர். பிறகுதான் அவர் காபூ லில் அரசரானர்.

பாபர் என்ற சொல்லுக்குப் பொருள் சிங்கம் என்பது. அதற்கேற்றபடியே பாபர் தைரியத்திலும் வீரத்திலும் சிறந்தவராக விளங்கினர். அன்பு, தயை, விடாமுயற்சி முதலிய நற்குணங்கள் அவரிடத்தி லுண்டு. சொல் தவருதவர். விரோதிகளிடத்தும் நேர்மையாக நடந்துகொள்ளுவார். உருது, பாரசீகம் முதலிய பாஷைகளில் அவருக்குத் தேர்ச்சியுண்டு.

பாபர் 1526-ம் வருஷம் இந்தியாவுக்குள் ஓர் பெரும் படையுடன் வந்தார். இப்ரஹீம் லோடிக்கும் பாபருக்கும் பானிப்பட்டு என்ற இடத்தில் ஓர் யுத்தம் நடந்தது. அதில் இப்ரஹீம் தோல்வி அடைந் தார். பாபர் டில்லியைக் கைப்பற்றினர். அவர் டில்லி சக்கரவர்த்தியு மானர். பாபர் மங்கோலிய வம்சத் தைச் சேர்ந்தவர். ஆகவே அவர் ஏற்படுத்திய வம் சத்திற்கு மொகலாயவம்சம்என்றுபெயர் ஏற்பட்டது.

பாபர் படையெடுத்தபோது வட இந்தியாவில் பல ராஜபுத்திர அரசர்களும், முகம்மதிய சுல்தான்களும் ஆண்டுவந்தார்கள். மேவார் என்ற உதயபுரி ராஜ்யம் சிறந்து விளங்கியது. அதன் அரசர் ராணு சங்கா என்பவர். அவர் வட இந்தியாவில் வேறு ஓர் ராஜபுத்திர ராஜ்யம் ஏற்பட்டதைக் கண்டு அதை எதிர்க்க ஆரம்பித்தார். பாபருக்கும் ராணுவுக்கும் சிக்ரி என்ற இடத்தில் ஓர் கடும் போர் நடந்தது. பாபர் மிகவும் முயற்சி செய்து வெற்றி பெற்ருர். பிறகு மாளவம், ஜோன்புரி, பீஹார் முதலிய நாடுகளைப் பாபர் ஜயித்து முகலாய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார்.

பாபர்

பாபர் ஐந்து வருஷங்கள் தான் இந்தியாவில் ஆண்டார். இந்த சிறிது காலத்தில் அவர் குடிகளின் மனதைக் கவர்ந்தார். அவர் குமாரனுகிய ஹுமாயூன் நோய்வாய்ப்பட்டிருக்கையில் தனது உயிரைக் கடவுளுக்கு ஒப்படைத்து ஹுமாயூனைப் பிழைப்பித்தார். அவர் கி.பி.1530-ல் ஆக்ராவில் இறந்தார். அவர் இந்தியாவை ஜயித்து இங்கே ஆண்டபோதிலும் அவருக்கு இந்தியாவின் மேல் அதிகப் பற்று கிடையாது. ஆகவே அவர் விருப்பப்படி அவர் உடல் காபூலில் அடக்கம் செய்யப்பட்டது.

கேள்விகள்

1. பாபரின் இளமைப் பருவம் எவ்வாறு இருந்தது?
2. அவர் ஏன் இந்தியாவின்மேல் படையெடுத்தார்? எங்கே சண்டை நடந்தது? யார் யாருக்கும்?
3. அவர் குணாதிசயங்கள் யாவை?

---

16. மகா அக்பர்

அக்பர் பட்டத்துக்கு வந்தபோது அவருக்கு வயது பதின்மூன்றே. மேலும் அவருக்குப் பல விரோதிகள் இருந்தனர். ஆகவே அக்பரின் அத்தை புருஷரான பைராம்கான் என்பவர் அக்பருக்குப் பிரதிநிதியாக இருந்து நாட்டைக்காத்துவந்தார். அக்பருக்குப் பதினெட்டு வயதாகும் வரையில் அவரே அரசாட்சியைக் கவனித்து வந்தார்.

ஹுமாயூன் இறந்த செய்தியைக் கேட்ட ஆப்கானிய அரசனது மந்திரியாகிய ஹெமு என்பவர் டில்லியைக் கைப்பற்றப் படையெடுத்து வந்தார். கி. பி. 1556-ல் மறுபடியும் பானிப்பட்டு என்னுமிடத்தில் பைராம்கானுக்கும் ஹெமுவுக்கும் ஓர் பலத்த யுத்தம் நடந்தது. அதில் ஹெமு தோல்வி அடைந்து உயிர் துறந்தார். அக்பரின் ராஜ்யம் அசைக்க முடியாமல் நிலைத்துவிட்டது.

இந்தியாவில் முகலாய ராஜ்யம் நிலைக்கவேண்டுமானல் வீரர்களான ராஜபுத்திரர்களின் நட்பைப் பெறவேண்டுமென்று அக்பர் கண்டுகொண்டார்.

ஆகவே அவர் ராஜபுத்திரர்களிடத்தும் அன்பு பாராட்டினர். ராஜபுத்திர அரசர்களைத் தனக்குக்கீழ் சிற்றரசராக இருக்கும்படிச்செய்தார். யுத்த காலங்களில் அவர்கள் அக்பருக்கு உதவி செய்யவேண்டியதாயிற்று. அக்பர் ராஜபுத்திர மாதர்களை மணம் செய்து கொண்டு அவர்களின் உறவினர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்தார். அவர் ஜயபுரி நாட்டு இளவரசியை மணந்துகொண்டார். தமது மகன் ஸலீம் என்பவனுக்கும் ஓர் ராஜபுத்திரப் பெண்ணை மணம் செய்து வைத்தார். தம்மனைவியின் சகோதரரான ராஜா பகவான்தாஸ் என்பவ

அக்பர்

ரையும் அவர் மகன் மான்சிங் என்பவரையும் பெரிய உத்தியோகங்களில் அமர்த்தினர். வேறு சில இந்துக்களுக்கும் அக்பர் அரசாங்கத்தில் பெரிய உத்தியோகங்கள் கொடுத்தார். இராஜா தோடர்மால் என்பவர் அவர்களில் முக்கியமானவர். அவர் வரீ வசூல் கணக்கில் மிகவும் திறமையுள்ளவர்.

மத விஷயங்களில் அக்பர் சமரசமான நோக்கம் உடையவர். சாஸ்திரங்களிலும் வேதங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களையும், முஸ்லீம் குருமார்களையும், கிறிஸ்துவ பாதிரிமார்களையும் வரவழைத்து அவர்களுடன் மத விஷயங்களில் தர்க்கம் செய்து விஷயங்களை அக்பர் அறிவார். இந்துக்கள் மட்டும் செலுத்தி வந்த ஜஸியா என்னும் வரியையும் யாத்திரை வரியையும் அக்பர் தள்ளிவிட்டார். பாலிய விவாகம், விதவைகள் உடன்கட்டை ஏறுதல் முதலியவைகளை அவர் தடுத்தார்.

கல்வி, சங்கீதம், சிற்பம் முதலியவை அக்பர் காலத்தில் மிகவும் மேன்மை அடைந்திருந்தன. அக்பருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் அவருக்குக் கேள்வி அறிவு அதிகம். அவர் ஓர் புத்தகசாலை அமைத்தார். அபுல் பாஸல் என்ற மந்திரி அக்பருடைய சரித்திரத்தை அக்பர்நாமா என்ற புத்தகத்தில் எழுதி வைத்தார். துளசிதாஸ், ஸூர்தாஸ், தான்ஸன் முதலிய கவிகள் அக்பர் காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். அக்பர் ராமாயணம், மகாபாரதம் முதலிய நூல்களைப் பாரசீக பாஷையில் மொழிபெயர்க்க வைத்தார். பரத்பூர் சிக்ரி என்ற இடத்தில் ஓர் அழகிய கோட்டையையும் அரண்மனையையும் கட்டினர்.

இவ்வாறு சிறப்பாக 50 ஆண்டுகளுக்கு மேல் அரசாண்டு அக்பர் கி.பி. 1605-ல் மரணமடைந்தார். அவருக்குப் பின் ஸலீம் என்ற அவர் குமாரர் பட்டத்துக்கு வந்தார்.

கேள்விகள்

1. இரண்டாம் பானிப்பட்டு யுத்தம் யார் யாருக்கும் நடந்தது? எவ்வருஷம்?

2. அக்பர் ராஜபுத்திரர்களிடம் எவ்வாறு நடந்து கொண்டார் ?

3. அவர் செய்த சீர்திருத்தங்கள் யாவை?

4. அக்பர் காலத்து கல்வி நிலை யாது ?

---

17. ஔரங்கசீப்

கீர்த்தி வாய்ந்த அக்பரின் பெயரன் ஷாஜ ஹானின் புதல்வர்களுள் மிகவும் தந்திரமும் சாமர்த் தியமும் வாய்ந்த ஔரங்கசீப் கி. பி. 1658-ல் முகல் சக்கிர வர்த்தியானர். ஷாஜ ஹான் நோய்வாய்ப் பட்டதும், அவர் குமாரர்கள் நால்வ ருக்குள் போட்டி ஏற்பட்டது. அதில் ஔரங்கசீப் வெற்றி பெற்று, தன் தகப் பனைச் சிறைசெய்து முடி சூட்டிக்கொண் டார்.

ஔரங்கசீப்

ஔரங்கசீப் இரத் தம் சிந்தியும் கொடுங் கோன்மையிலும் பட்டத்துக்கு வந்தபோதிலும் அவ ரிடத்தில் பல நல்ல குணங்கள் காணப்பட்டன. அவர் தெய்வ பக்தி உடையவர். அதிக மதப்பற்று உடை

யவர். அவர் எளிய வாழ்க்கையையே மிகவும் விரும்பினார். மதுபானம் செய்யமாட்டார். அவர் அரசாங்க வருமானத்திலிருந்து தம் சொந்த செலவுக்கு எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. குரான் பிரதிகள், குல்லாய்கள் செய்து விற்றுக் கிடைக்கும் பொருளைக் கொண்டே அவர் தம் சொந்தச் செலவைச் செய்து கொண்டார். இவர் சிற்றின்பங்களையும் மது மாமிசங்களையும் ஒழித்தார். இவ்வளவு நற்குணங்களுக்கு இடையில் அவரிடத்தில் மதத்துவேஷம், பிறரிடத்தில் அவநம்பிக்கை ஆகிய இரண்டு கெட்ட குணங்கள் இருந்தன. இதனாலேயே அவர் பெயர் கெட்டு, ராஜ்யமும் க்ஷீணிக்க ஆரம்பித்தது.

அக்பரால் நீக்கப்பட்ட ஜஸியா வரி, யாத்திரை வரி முதலியவைகளை ஔரங்கசீப் மறுபடியும் இந்துக்களுக்கு விதித்தார். இன்னும் அவர் ராஜபுத்திரர்களை விரோதித்துக் கொண்டார். மேவார், மார்வார் என்ற ராஜபுத்திர ராஜ்யங்களின் மீது படையெடுத்து அவைகளைத் தம் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். ராஜாங்க உத்தியோகத்தில் இருந்த இந்துக்களை எல்லாம் உத்தியோகத்திலிருந்து விலக்கி விட்டார்.

ஔரங்கசீப் ஒரு சிறந்த வீரர். தம்முடைய ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்த எண்ணினார். ஒரு பெரும் சேனையுடன் தக்ஷிணத்தின் மேல் படையெடுத்துச் சென்றார். பீஜப்பூர், கோல்கொண்டா என்ற இரண்டு முகம்மதிய ராஜ்யங்கள் மீது படையெடுத்தார். இந்தப் போர் பல வருஷங்கள் நடந்தன. பிறகு இவர் சிவாஜியுடன் போர் செய்யவேண்டியதாயிற்று. கடைசியில் பீஜப்பூர், கோல்கொண்டா முதலாய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்

டன. ஔரங்கசீப்பினல் கடைசி வரையில் சிவாஜியை அடக்கவே முடியவில்லை. பிற்காலத்தில் இவர் பலரிடம் தோல்வியுற்ருர். தான் எடுத்த காரியங்களை முடிக்க முடியாமல் போவதைக் கண்ட ஔரங்கசீப்பின் மனம் புண்ணுயிற்று. இவர் கண் முன்பாகவே இவரது சாம்ராஜ்யம் க்ஷீணதசை அடைவதைக் கண்டு மனம் நொந்தார்.

இவர் கி. பி. 1707-ல் மனம் உடைந்து மரணமடைந்தார். அவருக்குப் பின் பட்டம் பெற்ற முகலாய அரசர்கள் பலக் குறைவால் நாடு சீர்குலைந்தது. நாட்டில் குழப்பம் அதிகரித்தது. மாகாண கவர்னர்கள் சுவாதீனம் அடைந்தார்கள். ஆகவே பாபரால் ஏற்படுத்தப்பட்ட முகலாய ராஜ்யம் ஔரங்சீப்புக்குப் பின் க்ஷீணதசை அடைய ஆரம்பித்தது.

கேள்விகள்

1. ஔரங்கசீப் எவ்வாறு பட்டத்துக்கு வந்தார்?
2. அவரது சிறந்த குணங்கள் யாவை?
3. அவர் இந்துக்களை எவ்வாறு நடத்தினுர்?
4. அவர் ராஜ்யம் ஏன் சீர்குலைந்தது?

---

18. ஐரோப்பியர் இந்தியாவுக்கு வருதல்

வெகு காலத்திற்கு முன்பே இந்தியாவின் செல்வமும் செழுமையும் உலகத்தாருக்குத் தெரிந்து இருந்தன. இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் பல நூற்ருண்டுகளாக வியாபாரம் நடந்து வந்தது. நம் நாட்டிலிருந்து ஐரோப்பாவில் கிடைக்காத தந்தம், சந்தனக்கட்டை, முத்து, பருத்தி வஸ்திரம், பட்டு

வஸ்திரம், ஏலம், மிளகு முதலிய வாசனைத்திரவியங்களும் கொண்டு போகப்பட்டன. அங்கிருந்து வெள்ளி, கம்பளம், கண்ணாடி, ரசம் முதலியன கொண்டுவரப்பட்டன. முதலில் இவ் வியாபாரம் அராபியர்களால் ஒட்டக மார்க்கங்களில் நடைபெற்று வந்தன.

கி. பி. 15-வது நூற்றாண்டில் துருக்கியர்கள் தென்மேற்கு ஆசியா நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டார்கள். ஆகவே அராபிய வியாபாரம் தடைப்பட்டது. ஐரோப்பாவுக்கு இந்தியாவிலிருந்து பொருள்கள் போய்ச் சேரவில்லை. ஆதலால் தங்கள் வியாபாரத்துக்காக ஐரோப்பியர்கள் கடல் மார்க்கமாக வழி கண்டுபிடிக்க ஆரம்பித்தனர். அப்படி வந்தவர்களில் முதன்மையானவர் போர்ச்சுகீசியரே.

அக்காலத்தில் கப்பல் பிரயாணத்தில் கீர்த்திவாய்ந்தவர்கள் போர்ச்சுகல் நாட்டு மக்களே. கி. பி. 1497-ல் வாஸ்கோடகாமா என்ற போர்ச்சுகீசியர் ஓர் கப்பலில் புறப்பட்டு ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டை என்ற இடத்தில் அவர் தங்கினார். ஸாமொரின் என்ற கள்ளிக்கோட்டை அரசர் அவரை வரவேற்று வியாபாரம் செய்ய அனுமதி அளித்தார். உடனே போர்ச்சுகீசிய வியாபாரம் அதிகரித்தது. அராபியர்கள் அவர்களுடன் சண்டை செய்தார்கள். ஆனல் போர்ச்சுகீசியர்கள் அவர்களைத் தோற்கடித்து கோவா என்றவிடத்தைப் பிடித்துக் கொண்டார்கள். இப்போதும் இந்தியாவில் கோவா, டையூ, டாமன் என்ற இடங்கள் போர்ச்சுகீசியருக்குச் சொந்தமாக உள்ளன.

இவர்கள் மத விஷயத்தில் பிரவேசித்தபடியாலும் தங்கள் தாய் நாட்டிலிருந்து ஆதரவு கிடைக்கா

ததாலும் அவர்கள் வியாபாரம் க்ஷீணதசை அடைந்தது. மேலும் அவர்களுக்குப் போட்டியாக டச்சுக்

ஐரோப்பியர்களின் வியாபார ஸ்தலங்கள்

காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள்

முதலியவர்கள் இந்தியாவுக்கு வியாபாரம் செய்யவந்தார்கள். டச்சுக்காரர்கள் ஹாலண்டு என்ற தேசத்திலிருந்து வந்தார்கள். இவர்கள் போர்ச்சுகீசியரின் வியாபாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்கள். அவர்கள் பழவேற்காடு, மசூலிப்பட்டினம், பாட்னா முதலிய இடங்களில் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வியாபாரம் செய்தார்கள். பிறகு அவர்கள் கிழக்கு இந்தியத் தீவுகளுக்குச் சென்று தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்துகொண்டார்கள்.

இவர்களுக்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் இந்தியாவுக்கு வியாபாரம் செய்ய வந்தார்கள். இவர்கள் இருவருக்கும் பலத்த போட்டி ஏற்பட்டது. இவர்கள் சுதேச அரசர்களின் சண்டைகளில் கலந்துகொண்டு போர்செய்து வந்தார்கள். ஒரு காலத்தில் பிரெஞ்சு அதிகாரமும் வியாபாரமும் உயர்ந்த நிலையிலிருந்தன. கடைசியில் பிரெஞ்சு அதிகாரம் அழிந்தது. புதுச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர், மாஹி என்ற இடங்கள்தான் இப்போது பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமானவை.

இங்கிலாந்தில் கி. பி. 1600-ல் எலிசபெத் மகாராணியார் ஆண்டுவந்தார். அவர் காலத்தில் சில இங்கிலீஷ் வியாபாரிகள் கிழக்கு இந்திய கம்பெனி என்ற ஓர் வியாபாரக் கம்பெனியை ஏற்படுத்தினர். அவர்கள் கி. பி. 1612-ல் சூரத், மசூலிப்பட்டினம் என்ற இடங்களில் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். பிறகு 1639-ல் சென்னைப்பட்டினம் கிடைத்தது. அங்கே ஸெயின்ட் ஜார்ஜ் என்ற ஓர் கோட்டையையும் கட்டிக்கொண்டார்கள். அவர்கள் வியாபாரம் விருத்தி அடைந்து கோட்டையைச் சுற்றி ஓர் அழகிய நகரம் தோன்றியது. பின்பு

பம்பாய், கல்கத்தா முதலான இடங்களும் அவர்களுக்குக் கிடைத்தன. இந்தப் பிரதேசங்களில் ஆங்கிலேயர்கள் முதலில் குடியேறி வியாபாரத்திற்குப் பண்டகசாலைகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். பிறகு தங்கள் பொருள்களையும் மக்களையும் காக்கப் பலமான கோட்டைகளைக் கட்டிக்கொண்டார்கள். பிறகு தங்கள் சாமர்த்தியத்தால் தங்களுடன் போட்டியிட்டவர்கள்எல்லோரையும் வென்று தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்கள். கடைசியில் அவர்கள் தங்கள் ஆட்சியையும் இங்கே ஏற்படுத்தினார்கள்.

கேள்விகள்

1. பழைய ஐரோப்பிய வியாபாரம் எவ்வாறு நடந்தது ?
2. ஐரோப்பியர்கள் ஏன் கடல் மார்க்கம் கண்டு பிடித்தனர்?
3. கடல் மார்க்கம் கண்டுபிடித்தவர் யார்? அவர் எங்கே தங்கினார் ?
4. போர்ச்சுகீசிய வியாபார ஸ்தலங்கள் யாவை? பிரெஞ்சு வியாபார ஸ்தலங்கள் யாவை?
5. ஆங்கிலேயர்களின் வியாபாரம் எவ்வாறு உயர்ந்தது?

---

19. சிவாஜியும் மகாராஷ்டிரர்களும்

மகாராஷ்டிரர்களில் பல வம்சங்கள் உண்டு. அவற்றில் ஒன்று பான்ஸ்லே வம்சம். சிவாஜி பிறந்தது அந்த வம்சத்தில்தான். சிவாஜி 1627-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் தகப்பனார் ஷாஜி என்ப

வர். இவருடைய தாயார் ஜிஜீபாய். ஷாஜி பான்ஸ்லே பீஜப்பூர் சுல்தானிடத்தில் ஓர் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தார். இவருக்கு தஞ்சாவூர், பூனு இரண்டும் ஜாகீராகக் கிடைத்தன. ஷாஜி தம் மகனைப் பூனுவில் தாதாஜி காண்டதேவ் என்ற பிராமணரிடத்தில் கல்வி கற்கவிட்டு வைத்திருந்தார்.

சிவாஜி

சிவாஜி வில், வாள் முதலிய வித்தைகளைக் கற்ருர் தம் தாயாரிடத்திலும் குருவினிடத்திலும் பல வீரர்களின் கதைகளைக் கேட்டார். தாமும் அவர்களைப் போல் பல வீரச் செயல்கள் செய்யவேண்டுமென்று ஆசை கொண்டார். துகாராம், ராம்தாஸ் முதலிய

வர்கள் செய்த பிரசங்கங்களைக் கேட்டு, சிவாஜி, இந்துக்களைக் காக்க முன்வந்தார்.

சிவாஜி பல மகாராஷ்டிர வீரர்களை ஒன்று சேர்த்துக்கொண்டு பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான பிரதேசங்களைத் தாக்கினர். அங்கேயுள்ள சில கோட்டைகளையும் பிடித்துக்கொண்டார் உடனே பீஜப்பூர் சுல்தான் சிவாஜியை அடக்க ஒரு பெரும் சேனையை அப்ஸல்கான் என்னும் தளகர்த்தருடன் அனுப்பினர். இருவரும் சமாதானத்திற்கு இசைந்தனர். ஆகவே சிவாஜியும் அப்ஸல்கானும் தனியே ஓர் இடத்தில் சந்தித்தனர். அப்ஸல்கான் சிவாஜியை வஞ்சகத்தால் கொல்ல நினைத்தார். உடனே சிவாஜி தன்னிடத்திலிருந்த புலிநகத்தால் அப்ஸல்கானைக் குத்திக் கொன்றார். உடனே சிவாஜியின் சேனை பீஜப்பூரின் மீது படையெடுத்து சுல்தானின் சேனையைத் தோற்கடித்தது. சுல்தான் சிவாஜியுடன் சமாதானம் செய்துகொண்டார். சிவாஜியின் அதிகாரமும் வலிமையும் வளர்ந்து கொண்டே வந்தன.

டில்லி சக்கிரவர்த்தியாகிய ஔரங்கசீப், சிவாஜியின் அதிகாரத்தைக் கண்டு அவரை அடக்க எண்ணம் கொண்டார். உடனே ஷெயிஸ்டகான் என்பவர் வசம் ஓர் பெரிய சேனையைச் சிவாஜியை அடக்க அனுப்பினர். ஷெயிஸ்டகான் பூனவில் தங்கினர். சிவாஜியால் இப் பெரிய முகலாய சேனையைத் தாக்க முடியாது. ஆகவே அவர் சில வீரர்களுடன் மாறுவேஷம் பூண்டு பூனவுக்குச் சென்றார். நள்ளிரவில் ஷெயிஸ்டகானை எதிர்த்தார். ஷெயிஸ்டகான் உயிர்தப்பி ஓடினர்.

பின்பு ஔரங்கசீப் ஜயசிங் என்ற தளகர்த்தரை சிவாஜியை ஜயித்து வரும்படி அனுப்பினர். ஜயசிங் சிவாஜியைச் சமாதானமாகப் போகும்படி கேட்டுக்கொண்டார். சிவாஜியும் சம்மதித்து ஔரங்கசீப்பைக் காண டில்லிக்குச் சென்றார். அங்கே சிவாஜி சிறையிடப்பட்டார். சிவாஜி தந்திரமாக ஓர் சாப்பாட்டுக் கூடையில் ஒளிந்துகொண்டு சிறையிலிருந்து தப்பினர். மாறு வேஷம் பூண்டு பல மாதங்கள் கழித்துத் தம் தேசத்தை அடைந்தார்.

சிவாஜி 1674-ம் வருஷம் ராஜகிரிக் கோட்டையில் மகாராஷ்டிர அரசரென்று பட்டம் கட்டிக் கொண்டார். இவர் ஆறு வருஷ காலம் சிறப்பாக ஆட்சி செய்தார். இவர் தம்மைத் தமது குருவான ராமதாஸரின் தாஸனாகவும் பிரதிநிதியாகவும் நினைத்து அரசாண்டார். இவர் குடிகளின் க்ஷேமத்திற்காகப் பல நன்மைகள் செய்தார். தண்ணீர் வசதிக்காகப் பல கிணறுகளும் குளங்களும் வெட்டினர். ஏழைகளுக்கு உணவு அளிக்கப் பல சத்திரங்களைக் கட்டினர். அநேக கோவில்களும் கட்டி, அவைகளுக்கு மான்யங்கள் அளித்தார்.

சிவாஜி இந்து மதத்தைக் காத்தார். அவர் கடைசி வரையில் முகம்மதியர்களை எதிர்த்தார். ஆனால் தம் நாட்டு முகம்மதியர்களை வித்தியாசமின்றி நடத்தினர். அவர்கள் மதத்திற்கு எவ்விதத் தீங்கும் செய்யவில்லை. சண்டையில் சிறைப்பட்ட பெண்களையும் குழந்தைகளையும் இவர் அன்பாகவும் கௌரவமாகவும் நடத்தினர். பிற மாதர்களை இவர் தாயாகவும் சகோதரியாகவும் பாவித்தார். முகம்மதியர்களே சிவாஜியின் மேன்மையான குணங்களைப் புகழ்ந்திருக்கிறார்கள். சிவாஜியை இன்றும் மக்கள் புகழ்கி

ளூர்கள். இவ்வளவு சிறப்பாக ஆண்ட பிறகு கி. பி. 1680-ல் அவர் மரணமடைந்தார்.

கேள்விகள்

1. மகாராஷ்டிர தேசம் எது? அவர்கள் குணாதிசயங்கள் யாவை?
2. சிவாஜி எவ்வாறு கல்வி கற்ருர்?
3. அப்ஸல்கான், ஷெயிஸ்டகான் யார்? அவர்களை சிவாஜி எப்படி வென்ருர்?
4. சிவாஜி எவ்வாறு அரசராஞர்?
5. அவர் ஆட்சி எவ்வாறு இருந்தது?
6. அவர் முகம்மதியர்களை எவ்வாறு நடத்தினர்?

---

20. ராபர்ட் கிளைவ்

இப்போது இந்தியாவில் ஆங்கில ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த ஆட்சியை நம் நாட்டில் நிலைநாட்டியவர்கள் சில ஆங்கிலேயர்களே ஆவர். அவர்களில் சிறந்தவர் ராபர்ட் கிளைவ் என்பவர். இவர்தான் இந்தியாவில் ஆங்கில ஆட்சிக்கு அடிகோலினர்.

ராபர்ட் கிளைவ் 1725-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். இவர் சிறு வயதில் பள்ளிக்கூடம் ஒழுங்காகச் சென்று படிப்பதேயில்லை. இவர் பெற்ருேர்கள் இவரைக் கிழக்கிந்தியக் கம்பெனியில் ஓர் குமாஸ்தாவாகச் சேர்த்து அனுப்பினர்.

அப்போது இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள் மிகவும் பிரபலமாக இருந்தார்கள். அவர்கள் நாட்

டில் அதிக செல்வாக்கு பெற்று ஆங்கிலேயர்களைத் துரத்திவிட எண்ணம் கொண்டார்கள். டூப்ளே என்பவர், பிரெஞ்சுக்காரர்களுக்குக் கவர்னராக இருந்தார். அவர் சுதேச அரசர்களிடம் நட்புகொண்டு தம் அதிகாரத்தை வளர்த்து வந்தார்.

ராபர்ட் கிளைவ்

அப்போது கர்நாடகத்தில் அன்வாருத்தீன் என்ற நவாப் ஆண்டுவந்தார். அவருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் விரோதம் ஏற்பட்டது. இருவருக்கும் ஆம்பூர் என்ற இடத்தில் யுத்தம் நடந்தது. அதில் அன்வாருத்தீன் தோற்று மரணமடைந்தார். அவருக்குப் பின் கர்நாடகத்திற்கு அவர் மகன் மகம்மதாலி நவாப் ஆகவேண்டும். ஆனால் பிரெஞ்சுக்காரர்கள் சந்தா சாகிப் என்ற தங்கள் நண்பரை நவாப் பாக்கினர்கள். மகம்மதாலி திருச்சினப்பள்ளிக்கு ஓடி, கோட்டையில் ஒளிந்து கொண்டார். சந்தா சாகிப் பிரெஞ்சு உதவியைக் கொண்டு திருச்சிக் கோட்டையை முற்றுகை செய்தார். மகம்மதாலி ஆங்கிலேயரின் உதவியை நாடினர்.

இச் சமயத்தில்தான் கிழக்கு இந்தியக் கம்பெனியில் குமாஸ்தாவாக இருந்த கிளைவ், சேனையில் சேர்ந்தார். அப்போது கிளைவ் கவர்னருக்கு ஒரு யோசனை சொன்னார். கர்நாடகத் தலைநகராகிய ஆற்காடு, பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. அதை ஆங்கிலேயர்கள் பிடித்துக் கொண்டால் அப்போது சந்தா சாகிப்பின் சேனையில் ஓர் பகுதி திருச்சியிலிருந்து வரும். அதைச் சுலபமாகத் தோற்கடிக்கலாம். இதைக் கவர்னர் மெச்சி கிளைவையே ஒரு சேனையுடன் ஆற்காட்டை முற்றுகையிட அனுப்பினார். கிளைவ் ஆற்காட்டைப் பிடித்துக்கொண்டு சந்தா சாகிப்பின் சேனையைத் தோற்கடித்தார். பிறகு திருச்சிக்குச் சென்று பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்தார். கிளைவின் புகழ் எங்கும் பரவியது. அவர் இங்கிலாந்துக்குச் சென்றார்.

இரண்டு வருஷங்கள் கழித்து கிளைவ் இந்தியா திரும்பினார். அப்போது வங்காளத்தில் ஆங்கிலேயருக்கு ஓர் ஆபத்து ஏற்பட்டது. வங்காள நவாப் சிராஜ் உத்தௌலா ஆங்கிலேயரை நாட்டை விட்டுத் துரத்த எண்ணினார். கிளைவ் வங்காளம் சென்று சிராஜ் உத் தௌலாவை 1757-ல் பிளாஸி என்ற இடத்தில் தோற்கடித்துக் கொன்றார். பிறகு மீர் ஜாபர் என்பவரை நவாப்பாக்கினார். அதற்காக மீர்ஜாபர் இருபத்துநான்கு பர்க்காணங்கள் என்று சொல்லப்பட்ட சில ஜில்லாக்களையும் ஏராளமான பணத்தையும் கொடுத்தார். இது முதற்கொண்டு ஆங்கில ராஜ்யம் இந்தியாவில் வளர ஆரம்பித்தது. பிறகு கிளைவ் இங்கிலாந்து திரும்பினார். அவர் செய்த சேவைக்காக அவர் லார்டு பட்டம் பெற்றார். அவர் கி. பி. 1774-ம் வருஷத்தில் மரணமடைந்தார்.

கேள்விகள்

1. கிளைவ் ஏன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்?
2. பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் அதிகாரத்தை எவ்விதம் வளர்த்தார்கள்?
3. ஆம்பூர் சண்டை யார் யாருக்கும் நடந்தது? அதன் பலன் என்ன?
4. கிளைவ் ஏன் ஆற்காட்டை முற்றுகையிட்டார்? அதன் முடிவு என்ன?
5. வங்காள நவாப் யார்? அவர் ஏன் பதவி யிழந் தார்?
6. பிளாஸி யுத்தத்தின் பலன்கள் யாவை?
7. வங்காளத்தில் ஆங்கிலேயர்கள் அடைந்த நாடு எது?
8. கிளைவ் செய்த சேவைகள் யாவை?

---

21. வாரன் ஹேஸ்டிங்ஸ்—இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கத் தொடக்கம்

இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் அடிகோலினவர் கிளைவ் ஆவார். அந்த ஆட்சியை இன்னும் அதிகமாகப் பரவச் செய்து நன்ருக வேரூன்றச் செய்தவர் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆவார். கிளைவ் வங்காளத்தில் அதிக மேன்மை அடைந்து வந்த காலத்தில் இவர் அங்கே ஓர் குமாஸ்தாவாக இருந்தார். இவர் தமது ஒழுக்கத்தாலும் விடாமுயற்சியாலும் படிப்படியாக உயர்ந்து கி. பி. 1772-ம் வருஷம் வங்காள கவர்னர் ஆனர். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவர் கவர்னர் ஜெனரல் ஆனர்.

இவர் வங்காளத்தில் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்த ராஜ்யத்தை ஆளுவதற்கு நல்ல ஏற்பாடுகள் செய்தார். நாட்டைப் பல ஜில்லாக்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஓர் கலெக்டரை நியமித்தார். ஜில்லாக்களின் தலைநகரங்களில் நியாய ஸ்தலங்களை ஏற்படுத்தினர். கம்பெனியின் செலவைக் குறைத்தும் வருமானத்தை அதிகரித்தும் நாட்டில் ஆட்சி நிலைபெறச் செய்தார்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் பீஷ்வாப் பதவிக்காக இருவர் போட்டியிட்டனர். அவர்கள் இரண்டாம் மாதவ ராவும் ரகுநாத ராவும் ஆவார்கள். ரகுநாத ராவ் ஆங்கிலேயரின் உதவியை நாடினர். ஸால்ஸெட், பஸ்ஸீன் என்ற இரண்டு தீவுகளை ஆங்கிலேயர்களுக்கு உதவிக்காகக் கொடுக்க வாக்களித்தார். வாரன் ஹேஸ்டிங்ஸ் சம்மதித்தார். ஆனால் மகாராஷ்டிரர்கள் எல்லோரும் மாதவராவை ஆதரித்தார்கள். ஆகவே இருவருக்கும் போர் ஏற்பட்டது.

முதலில் மகாராஷ்டிரர்கள் வெற்றி பெற்றார்கள். பிறகு ஆங்கிலேயர்கள் சில இடங்களில் வெற்றி பெற்றனர். முடிவில் இரு கட்சிகளுக்கும் சமாதானம் ஏற்பட்டது. அதன்படி ஸால்ஸெட் தீவை ஆங்கிலேயர்கள் அடைந்தார்கள். ரகுநாத ராவ் உபகாரச் சம்பளம் பெற்றார். மாதவ ராவே பீஷ்வா ஆனர்.

பிறகு வாரன் ஹேஸ்டிங்ஸ் அயோத்தி நவாப்புக்கு உதவி செய்வதற்காக ரோஹில்கண்டு என்ற நாட்டுடன் போர் செய்தார். ரோஹில்லர்களைத் தோற்கடித்து அந்நாட்டை அயோத்தி நவாப்புக்குக் கொடுத்தார். நவாப் ஏராளமான பணம் வாரன்

ஹேஸ்டிங்ஸுக்குக் கொடுத்தார். இன்னும் வட இந்தியாவில் பல சிற்றரசர்களுடன் போர்செய்து கம்பெனியின் செல்வாக்கை அதிகப்படுத்தினர்.

வாரன் ஹேஸ்டிங்ஸ், பின் தென் இந்தியாவின் மேல் தம் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தார். அவர் மைசூரில் ஆண்ட ஹைதர் ஆலியுடன் போர் செய்ய ஆரம்பித்தார். ஹைதர் அடிக்கடி கர்நாடகப் பிரதேசத்தைக் கொள்ளையிட்டார். கர்நாடக நவாப் ஆங்கிலேயரின் உதவியை நாடியபடியால் ஹேஸ்டிங்ஸ் ஒரு சேனையை ஹைதருக்கு எதிராக அனுப்பினர். அச்சேனை ஹைதரைப் பல யுத்தங்களில் தோற்கடித்தது. ஹைதர் இறந்ததும் அவர் மகன் திப்பு சுல்தான் சமாதானத்துக்கு வந்தார். ஆங்கிலேய அதிகாரம் இப்போது நாடெங்கும் பரவியது.

கேள்விகள்

1. ஹேஸ்டிங்ஸ் வங்காளத்தை எவ்வாறு ஆண்டார்?
2. அவர் ஏன் மகாராஷ்டிரர் விவகாரங்களில் பிரவேசித்தார்?
3. ரோஹில்லருடன் ஏன் போர்புரிந்தார்?
4. தென் இந்தியாவில் எவ்வாறு ஆங்கிலேய அதிகாரத்தைப் பரவச் செய்தார்?

---

22. ஹைதர் அலியும் திப்பு சுல்தானும்

கர்நாடகத்தில் மகம்மதாலி ஆண்டுவந்த காலத்தில் மைசூரில் ஓர் இந்து வம்சம் ஆண்டு வந்தது. இந்த நாடு தட்சிண பீடபூமியின் தென் பாகத்தில் உள்ளது. அது ஏற்பட்ட நாள் முதற் கொண்டே இந்து அரசர்களால் ஆளப்பட்டு வருகிறது. முத

லில் அது விஜயநகர ராஜ்யத்துக்கு உட்பட்டும் சுயேச்சை நாடாகவும் இருந்தது. நடுவில் கி.பி. 1761 முதல் சுமார் 50 வருஷம் அது முகம்மதியர்கள் வசம் இருந்தது. அங்கே ஆண்ட முகம்மதிய அரசர்கள் ஹைதர் அலியும், அவருடைய குமாரர் திப்பு சுல்தானும் ஆவர்.

ஹைதர் அலி

ஹைதர் அலி ஓர் ஏழைப் போர்வீரனின் மகன். அவரும் ஒருபெரிய வீரர். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் அதிக புத்தி கூர்மையும் சாமர்த்தியமும் உடையவர். முதலில் ஒரு சாதாரண சிப்பாயாக இருந்தார். பிறகு தம் சாமர்த்தியத்தாலும் உழைப்பாலும் படிப்படியாக உயர்ந்து மைசூர் சேனைத் தலைவரானர்.

அப்போது மைசூரை ஆண்ட அரசர் மிகவும் சிறுவர். ஆகவே அவர் சிற்றப்பன் அரசியலைக் கவனித்து வந்தார். அவருக்கு அரசைக் கைக்கொள்ள ஆசை ஏற்பட்டது. இதை அறிந்த சேனைத் தலைவராகிய ஹைதர், இளவரசர் பக்கம் சேர்ந்துகொண்டு சிற்றப்பனைச் சிறையிலடைத்துத் தாமே சில காலம் அரசர் பெயரால் ஆட்சி செய்தார். கடைசியில் அரசரைச் சிறையிட்டு கி. பி. 1761-ல் தாமே அரசர் ஆனர். மைசூரில் முகம்மதிய ஆட்சி ஆரம்பித்தது.

ஹைதர் சுமார் 22 வருஷ காலம் மைசூரை ஆண்டார். அவர் காலத்தில் மைசூர் ராஜ்யம் அதிகமாகப் பரவியது. தென் இந்தியா முழுமையும் தம் ஆட்சிக்குள் கொண்டு வர அவர் பிரயத்தனப்பட்டார். ஹைதர் தம் சேனையை பிரெஞ்சுக்காரர்களின் உதவியால் மேல் நாட்டுப் போர் முறைகளில் பழக்கினர். ஹைதரின் அதிகார வளர்ச்சியைக் கண்ட மகாராஷ்டிரரும் ஹைதராபாத் நிஜாமும் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டனர். ஆனல் ஹைதர் சாமர்த்தியமாக ஆங்கிலேயர்களைப் பிரித்துவிட்டார். ஹைதர் அலியும் ஆங்கிலேயரும் போர் செய்தார்கள். முதலில் ஹைதர் தோல்வி அடைந்தார். பிறகு அவர் திடீரென்று சென்னையைத் தாக்கிக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டார். ஆகையால் ஆங்கிலேயர் அவருடன் சமாதானம் செய்து கொண்டனர். ஹைதருக்கு உதவி செய்ய வாக்களித்தனர்.

திப்பு

சில காலம் கழித்து மகாராஷ்டிரர்கள் மைசூரின் மேல் படையெடுத்தார்கள். இச்சமயம் ஆங்கிலேயர் வாக்களித்தபடி ஹைதருக்கு உதவி செய்யவில்லை.

ஆகவே ஒரு பெரிய படையுடன் ஹைதர் கர்நாடகத்தின்மேல் படையெடுத்தார். ஆங்கிலேயர்கள் படுதோல்வி அடைந்தார்கள். கடைசியில் ஸர் அயர்கூட் என்ற தளகர்த்தர் ஹைதரைப் பரங்கிப்பேட்டை, ஆரணி முதலிய இடங்களில் தோற்கடித்தார். ஹைதர் கி. பி. 1782-ல் மரணமடைந்தார். அவருக்குப் பின் அவர் குமாரர் திப்பு சுல்தான் மைசூருக்கு அரசரானார். இவர் சுமார் 17 வருஷ காலம் ஆட்சி செய்தார். இவர் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டார்.

திப்பு சுல்தான் ஹைதரைப் போலவே தைரியம் உடையவர். நல்ல படிப்பாளி. ஆனால் புத்திசாலி அல்ல. இவர் மதப்பற்று அதிகம் உள்ளவர். பிரெஞ்சுக்காரரின் நட்பைப் பெற்று ஆங்கிலேயரை விரோதித்துக்கொண்டார். இவர் நாட்டில் மதுவை ஒழித்தார். இந்துக் கோவில்களுக்கு மான்யங்கள் அளிக்கப்பட்டன. அவர் தம் ராஜ்யத்தைப் பெரியதாக்க எண்ணி குடகு, மலையாளம் முதலிய இடங்களைக் கைப்பற்றினார். பிறகு திருவாங்கூரை எதிர்த்தார். திருவாங்கூர் அரசர் ஆங்கிலேயர்களின் உதவியை நாடினார். அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த காரன்வாலிஸ் பிரபு, ஒரு சேனையுடன் சென்று பெங்களூரைக் கைப்பற்றினார். பிறகு மைசூரின் முக்கிய நகராகிய ஸ்ரீரங்கப்பட்டணத்தைத் தாக்கினார். உடனே திப்பு பயந்து சமாதானம் செய்துகொண்டார். அதன்படி யுத்தச் செலவையும், தம் ராஜ்யத்தில் பாதி பாகத்தையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்தார்.

திப்புவின் பலம் மிகவும் குறைந்துவிட்டது. ஆயினும் அவர் ஆங்கிலேயரைப் பழிவாங்க முயற்சி

செய்துவந்தார். மறுபடியும் பிரெஞ்சுக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு ஆங்கிலேயரை நாட்டைவிட்டுத் துரத்த ஏற்பாடு செய்தார். அப்போது வெல்லஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்தார். அவர் திப்புவைத் தம்முடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளும்படி கேட்டார். திப்பு மறுக்கவே இருவருக்கும் யுத்தம் தொடங்கியது. இதுவே கடைசி மைசூர் யுத்தம். திப்பு தோல்வியடைந்து ஸ்ரீரங்கப்பட்டணக் கோட்டைக்குள் ஓடி ஒளிந்துகொண்டார். ஆங்கிலேயர்கள் கோட்டையை முற்றுகை செய்தனர். திப்பு கடைசி வரையில் கடும் போர் செய்து உயிர் விட்டார். ஆங்கிலேயர்கள் மைசூர் ராஜ்யத்தைப் பழைய இந்து வம்சத்தாரிடம் ஒப்படைத்தார்கள். ஹைதர் ஜயித்த மற்ற நாடுகளை ஆங்கிலேயர்களே வைத்துக் கொண்டார்கள்.

கேள்விகள்

1. மைசூர் ராஜ்யம் முகம்மதியர் வசம் எவ்வாறு வந்தது? எத்தனை வருஷம் இருந்தது?
2. ஹைதர் எவ்வாறு ஆண்டார்?
3. அவர் ஏன் ஆங்கிலேயருடன் போர்செய்தார்?
4. திப்புவின் குணாதிசயம் யாது?
5. திப்பு ஏன் திருவாங்கூரோடு சண்டை செய்தார்? அதன் பலன் யாது?
6. வெல்லஸ்லி பிரபு திப்புவை எவ்வாறு அடக்கினார்?

23. வெல்லஸ்லி பிரபு

1798-ம் வருஷத்தில் வெல்லஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டு இந்தியாவுக்கு வந்தார். இந்தியாவில் ஆண்ட பெரிய கவர்னர் ஜெனரல்களில் வெல்லஸ்லியும் ஒருவராவர். இவர் மிக புத்தி கூர்மையும் திறமையும் உடையவர். அவர் சுதேச மன்னர்களைத் தம் அதிகாரத்துக்கு உட்படுத்தி ஆங்கிலேய ஆட்சியை இந்தியாவில் நிலைநாட்ட முயன்றார்.

வெல்லஸ்லி பிரபு

இதற்காக அவர் துணைப்படை முறை என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தினர். அதன் படி ஒவ்வொரு சுதேச அரசரும் ஒரு ஆங்கிலச் சேனையைத் தம் ராஜ்யத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சுதேச மன்னரே அச் சேனையின் செலவைக் கொடுக்க வேண்டும். சுதேச அரசர்கள் ஒருவரோடொருவர் பகையோ நட்போ ஆங்கிலேயர் உத்தரவில்லாமல் வைத்துக்கொள்ளக் கூடாது. உள்நாட்டுக் கலகங்களிலிருந்தும் அந்நிய ஆபத்துக்களிலிருந்தும் ஆங்கிலேயர்கள் அவர்களைக் காப்பாற்றுவார்கள். சுதேச மன்னர்களை மேற்பார்வையிட ஓர் ஆங்கிலேய உத்தியோகஸ்தர் ஒவ்வோர் சபையிலும் இருக்க வேண்டும்.

இந்த உடன்பாட்டை எல்லா சுதேச மன்னர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வெல்லஸ்லி வற்புறுத்தினர். முதல் முதலில் இந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டவர் ஹைதராபாத் நிஜாம் ஆவார். அவருக்குப் பக்கத்தில் மகாராஷ்டிரர்களின் அபாயம் அடிக்கடி ஏற்பட்டபடியால் அவர் ஆங்கிலேயர்களின் நட்பை உடனே தேடிக்கொண்டார். தம்மிடம் இருந்த ஆங்கிலப் படையின் பாதுகாப்புக்காக அவர் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபுரம் என்ற ஜில்லாக்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். ஆகவே அவைகளை இப்போதும் "கொடை ஜில்லாக்கள்" என்று அழைக்கிறார்கள். அயோத்தி நவாப்பும் துணைப்படை உடன்படிக்கையில் சேர்ந்து கொண்டார். அதற்காக அவர் கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள செழிப்பான பிரதேசத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்தார்.

இதன் பிறகு வெல்லஸ்லி தம் கவனத்தை மகாராஷ்டிரர்கள் விஷயத்தில் செலுத்த ஆரம்பித்தார். மகாராஷ்டிரத் தலைவர் பீஷ்வாவும், பரோடா தேச அரசராகிய கெய்க்வாரும் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இதை அறிந்த சிந்தியாவும், பான்ஸ்லேயும் ஆங்கிலேயருடன் போருக்குத் தயாரானர்கள். வெல்லஸ்லி பிரபுவின் சகோதரர் ஆர்தர் வெல்லஸ்லி இரு மகாராஷ்டிரத் தலைவர்களையும் அஸ்ஸே என்ற இடத்தில் தோற்கடித்துத் துணைப்படை உடன்படிக்கையில்சேரும்படி செய்தார். மகாராஷ்டிர ராஜ்யங்களில் சில பாகம் ஆங்கிலேயர் கைக்கு வந்தது. ஆங்கிலேயரின் வளரும் அதிகாரத்தைக் கண்டு சில ராஜபுத்திரர்களும் உடன்படிக்கையில் சேர்ந்துகொண்டார்கள்.

மகாராஷ்டிரர்களில் ஹோல்கார் மட்டும் ஆங்கிலேயருடன் சேராமல் இருந்தார். அவர் அடிக்கடி ராஜபுத்திரர்களுடன் போர்புரிந்தார். அவரை அடக்க வெல்லஸ்லி ஓர் சேனையை அனுப்பினார். ஹோல்கார் அதைத் தோற்கடித்தார். மறுபடியும் ஓர் பெரிய சேனை வந்தது. ஹோல்கார் பயந்து பஞ்சாப்புக்கு ஓடிவிட்டார். ஆங்கிலேயர்கள் பல கோட்டைகளைப் பிடித்தார்கள்.

வெல்லஸ்லி பிரபு சுதேச அரசர்கள் விஷயத்தில் அதிகமாகப் பிரவேசிப்பதைக் கண்ட கம்பெனி அதிகாரிகள், அவரைத் திரும்பி வரும்படி அழைத்தார்கள்.

சென்னை மாகாணம் இவர் காலத்தில்தான் உருவாயிற்று. வெல்லஸ்லி செய்த பல போர்களால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. ஏராள பொருள் நஷ்டமும், செலவும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டன.

கேள்விகள்

1. துணைப் படை ஏற்பாடு என்றால் என்ன ?
2. அதை ஏன் வெல்லஸ்லி ஏற்படுத்தினார் ?
3. முதலில் யார் உடன்பாட்டில் சேர்ந்தார் ? அதன் பலன் என்ன ?
4. மகாராஷ்டிரர்கள் எவ்வாறு உடன்படிக்கையில் சேர்ந்தார்கள் ?
5. வெல்லஸ்லி ஏன் திருப்பி அழைக்கப்பட்டார் ?

24. வில்லியம் பெண்டிங்க் பிரபுவும் ராஜாராம் மோகன்ராயும்

வெல்லஸ்லி பிரபு நாட்டைவிட்டுச் சென்ற பிறகு சில கவர்னர் ஜெனரல்கள் மிகவும் மேன்மை யாக ஆட்சி செய்தார்கள். அவர்கள் ஆங்கிலேய அதிகாரத்தைப் பல வழிகளில் அதிகப்படுத்தினுர்கள். நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிர்ப்பு இல்லாமல் செய்துவிட்டார்கள், பிறகு 1828-ம் வருஷத்தில் பெண்டிங்க் பிரபு கவர்னர் ஜெனரலாக வந்தார்.

இவர் 1828 முதல் 1837 வரையில் கவர்னர் ஜெனரலாக இருந்தார். இவர் முதலில் சென்னே கவர்னராக இருந்தார். இவர் மிகுந்த அறிவும் அனுபவமும் உடையவர். இவர் காலத்தில் நாட்டில் அமைதி ஏற்பட்டது. இவர் குடகு நாட்டை ஆங்கி லேய ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். இவர் காலத்தில் சண்டைகள் ஒன்றும் கிடையாது. ஆகவே அவர் பல நல்ல சீர்திருத்தங்களேச் செய் தார்.

அவர் ஆங்கில பாஷையை ராஜ பாஷையாக்கி ஞர். அவர் காலத்தில் பல ஆங்கிலக் கல்லூரி களும் பாடசாலேகளும் ஏற்பட்டன. கல்கத்தாவில் ஓர் வைத்தியக் கலாசாலே ஏற்பட்டது. ஆங்கில பாஷையில் சாமர்த்தியமுள்ள இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டன. கலெக்டர், ஜட்ஜு முதலான உத்தியோகங்களுக் கும் இந்தியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர் களுக்கு உயர்ந்த சம்பளங்களும் கொடுக்கப்பட்டன.

அவர் காலத்தில் தக்கர் என்ற ஓர் கொள்ளேக் கூட்டத்தார் நாடெங்கும் பரவி இருந்தார்கள். அவர்

கள் சாலைகளிலும் காடுகளிலும் திரிந்துகொண்டு வழிப்போக்கர்களுக்குத் துன்பம் விளைவித்து வந்தார்கள். அவர்களை எல்லாம் பிடித்து பென்டிங்க் அடக்கிவிட்டார். அவர்களில் அநேகர் மரண தண்டனை அடைந்தார்கள். நாட்டில் சமாதானம் ஏற்பட்டு, மக்கள் பயமின்றிப் பிரயாணம் செய்தார்கள்.

அவர் காலத்தில் இந்துக்களிடத்தில் சககமனம் அல்லது உடன்கட்டை ஏறுதல் என்ற ஓர் பழக்கம் இருந்தது. அதன்படி பெண்கள் தங்கள் புருஷன் இறந்தவுடன் கணவரது உடலோடு சேர்ந்து எரிந்து உயிர்விடுவார்கள். இந்தப் பழக்கம் நாட்டில் அதிகமாகப் பரவியிருந்தது. இஷ்டமில்லாத பெண்களும் உறவினர்களின் தொந்தரவின் மேல் உடன் கட்டை யேறினார்கள். மகா அக்பரும் இதைத் தடுக்க சட்டம் செய்தார். ஆனால் அது குறையவில்லை. ஆகவே பென்டிங்க் பிரபு ஓர் சட்டம் செய்தார். அதன்படி உடன்கட்டை ஏறுவது குற்றமென்றும் அதற்குக் காரணமாக இருப்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் ஏற்பட்டன. இதன் பிறகுதான் இக் கொடிய பழக்கம் நின்றது.

சககமனம் என்ற கொடிய பழக்கம் கூடாதென்றும் அது நிறுத்தப்பட வேண்டுமென்றும் பல சாஸ்திரம் அறிந்த இந்துக்கள் அபிப்பிராயப்பட்டனர். இவர்கள் எல்லாம் பென்டிங்க் பிரபுவைச் சட்டம் செய்யத் தூண்டினார்கள். அவர்களில் முக்கியமானவர் ராஜாராம் மோகன்ராய் என்பவர். இவர் வங்காளத்தில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். இவர் ஆங்கிலமும் சம்ஸ்கிருதமும் நன்றாகக் கற்று

அறிந்தார். இவர் இந்து சாஸ்திரங்களையும் ஆசாரங்களையும் நன்கு அறிந்தார். அவைகளை எல்லாம் சீர்திருத்தவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அதே நோக்கம் கொண்ட பலர்

ராஜாராம் மோகன்ராய்

ஒன்று சேர்ந்து ஓர் சங்கத்தையும் ஏற்படுத்தினார்கள். அதற்குப் பிரம்ம சமாஜம் என்று பெயர். ராஜாராம், இச் சபையின்மூலம் சீர்திருத்தம் செய்ய முயன்றார். அவர் பல வழிகளில் பெண்டிங்க் பிரபுவுக்கு உதவினார்.

கேள்விகள்

1. பெண்டிங்க் செய்த சீர்திருத்தங்கள் யாவை?
2. தக்கர்கள் யார்? அவர்கள் எவ்வாறு அடங்கினர்?

3. உடன் கட்டை ஏறுதல் எவ்வாறு நின்றது?
4. ராஜாராம் மோகன்ராய் யார்? அவர் எவ்வாறு பெண்டிங்க் பிரபுவுக்கு உதவினர்?

---

25. விக்டோரியா மகாராணியாரின் விளம்பரம்

கானிங் பிரபு என்பவர் 1856-ல் கவர்னர் ஜெனரலானர். மேலும் மக்களுக்கு ஆங்கில ஆட்சியில் அவநம்பிக்கையும் அதிருப்தியும் ஏற்பட்டன. ஆகவே 1857-ல் ஓர் பெரும் கலகம் ஏற்பட்டது. அதற்கு சிப்பாய்க் கலகம்என்றுபெயர். அக் கலகத்திற்குப் பல காரணங்கள் உண்டு. சேனையிலிருந்த சிப்பாய்கள் திடீரென்று கலகம் செய்து தங்கள் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களையும், தளகர்த்தர்களையும் கொன்ருர்கள். கலகம் மீரட், டில்லி, லக்னே, கான்பூர் முதலிய இடங்களில் பரவியது. கலகக்காரர்கள் பகதூர் ஷா என்ற மொகலாய வம்சத்தினரை டில்லி சக்கிரவர்த்தியாக்கினர்கள். ஆனல் கலகம் எல்லாவிடங்களுக்கும் பரவவில்லை. அவர்களிடத்து ஒற்றுமையும் இல்லை. ஆகவே கலகம்

விக்டோரியா மகாராணி

சீக்கிரத்தில் அடக்கப்பட்டது. கலகம் செய்தவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்படாமல் மன்னிப்பு அடைந்தார்கள்.

சிப்பாய்க் கலகம் அடக்கப்பட்டதும், 1858-ல் கம்பெனியின் ஆட்சி முடிந்தது. இந்தியா இங்கிலாந்து மன்னரது ஆட்சிக்கு உட்பட்டது. இங்கிலாந்து அரசியாகிய விக்டோரியா மகாராணியார் இந்திய அரசாட்சியைத் தாமே ஏற்றுக் கொண்டார். இந்திய விஷயங்களைக் கவனிக்க ஓர் மந்திரி நியமிக்கப்பட்டார். இந்திய கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு வைசிராய் ஆனார்.

விக்டோரியா மகாராணியார் தாம் சக்கிரவர்த்தினியானதும் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதற்கு ‘ராணியாரின் சாசனம்’ என்று பெயர். அதில் இந்தியர்களுக்கு வேண்டிய எல்லா விஷயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. குடிகளின் நன்மையைக் கருதியே அரசாட்சி நடைபெறும் என்றும், மதவிஷயங்களில் அரசாங்கத்தார் தலையிடமாட்டார்கள் என்றும், அரசாங்கத்தில் ஜாதி வித்தியாசமின்றி யோக்கியதை உள்ளவர்களுக்கே உத்தியோகங்கள் கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. கலகங்களில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோருக்கும் மன்னிப்பு அளிக்கப்பட்டது. கம்பெனிக்கும் சுதேச அரசர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஒப்புக்கொள்வதாகக் கூறப்பட்டது. இந்தியர்களின் நன்மைக்காகவே அரசாட்சி நடைபெறும்.

இச் சாசனத்தைக் கேட்டதும் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ராணியாரை எல்லோரும் போற்றினார்கள். அவர்

கி.பி. 1901-ல் மரணமடைந்தார். அவர் ஞாபகார்த்த மாக நாட்டில் பல இடங்களில் உருவச் சிலைகளும் கட்டிடங்களும் ஏற்பட்டன.

கேள்விகள்

1. கடைசி கவர்னர் ஜெனரல் யார்?
2. சிப்பாய்க் கலகத்திற்குக் காரணம் என்ன?
3. ராணியாரின் அறிக்கையில் உள்ள விஷயங்கள் யாவை?

---

26. வைசிராய்களின் ஆட்சி—சமூக, ராஜீய சீர்திருத்தங்கள்

இந்தியாவில் கம்பெனி ஆட்சிமுடிந்து ராணியே அரசாட்சியை ஏற்றுக்கொண்டு ராஜப் பிரதிநிதிகள் மூலம் அரசியல் நடந்தது. ராஜப்பிரதிநிதிகள் புதிதாக நாடு ஒன்றையும் பிடிக்கவில்லை. ராணியின் அறிக்கையில் கூறியவாறு குடிகளின் நன்மைக்கே அரசாட்சி நடந்தது. இந்தியர்கள் கல்வி, வியாபாரம், விவசாயம் முதலிய விஷயங்களில் முன்னேற்றம் அடைவதற்கான வேலைகள் செய்யப்பட்டன. அநேக சீர்திருத்தங்கள் மக்கள் நன்மைக்காகச்செய்யப்பட்டன. அநேக ராஜப்பிரதிநிதிகள் பல சீர்திருத்தங்கள் செய்தார்கள். அவர்களில் முக்கியமான சில வைசிராய்களின் ஆட்சியைப் பற்றியே இங்கே கவனிப்போம்.

ரிப்பன் பிரபு (கி. பி. 1880-1884):—இவர் வைசிராய்களில் முக்கியமானவர். இவர் பரந்த நோக்கமும் இந்தியர்களிடத்து அதிக அன்பும் உடையவர்.

இவர் காலத்தில்தான் முதல் முதலில் 'ஸென்ஸஸ்' என்று கூறப்படும் ஜனத்தொகைக் கணக்கு எடுக்கப்பட்டது. இவர் குடிகளின் நன்மைக்காகவே பல சீர்திருத்தங்களைச் செய்தார். சுதேச தினசரிப் பத்திரிகைகள் வெளியிடுவதற்குள்ள கட்டுப்பாடுகளை இவர் நீக்கினார். ரிப்பன் பிரபுவுக்கு முன் இருந்த வைசிராய், மைசூர் அரசர் சரியாக ஆளாதபடியால் அவரைப் பட்டத்தினின்றும் நீக்கி ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் ஆண்டுவந்தார்கள். ரிப்பன் பிரபு மைசூர் ராஜ்யத்தை அந்த வம்சத்து இளவரசருக்குத் திருப்பிக் கொடுத்தார்.

ரிப்பன் பிரபு

இவர் காலத்தில்தான் முதலில் ஜில்லா போர்டுகளும், நகர சபைகளும், பஞ்சாயத்து சபைகளும் ஏற்பட்டன. இச் சபைகள் சுகாதாரம், கல்வி, சாலைகள் முதலிய விஷயங்களைக் கவனித்து வந்தன. வரி வசூலிக்கும் அதிகாரமும் இச் சபைகளுக்குக் கொடுக்கப்பட்டன. இவைகளால் ரிப்பனிடத்தில் மக்களுக்கு அதிக விசுவாசம் ஏற்பட்டது. சென்னை கார்பொரேஷன் கட்டிடத்திற்கு 'ரிப்பன் மாளிகை' என்று பெயர்.

கர்ஸன் பிரபு (1898-1905) :— இந்தியாவில் ஆண்ட வைசிராய்களில் மிகவும் கீர்த்திவாய்ந்தவர்

கர்ஸன் பிரபு. இவர் விவசாயிகளின் நன்மைக்காகப் பல சட்டங்களை ஏற்படுத்தினர். கூட்டுறவு நிதிகளையும் சங்கங்களையும் இவர் ஏற்படுத்தினர். கைத்தொழிலும் வியாபாரமும் விருத்தி அடைய ஓர் தனி



ரிப்பன் மாளிகை

இலாகா ஏற்படுத்தினர். உப்பு வரியையும் வருமான வரியையும் அவர் குறைத்தார். விவசாயிகளுக்கு அவர் அகில இந்திய விவசாய இலாகா ஒன்றை ஏற்படுத்தினர்.

அதன் மூலமாக விவசாயிகள் புதிய முறைகளில் விவசாயம் செய்வது, புதிய கருவிகள், உரங்கள் உபயோகிப்பது முதலியவைகளைக் கற்றுக்கொண்டார்கள். நம் நாட்டிலிருந்த பண்டைக் கால அழகிய கட்டிடங்களும் சரித்திரச் சின்னங்களும் அழிந்து போகாமல் இருக்கச் சட்டம் செய்தார்.

இவர் காலத்தில் வங்காள மாகாணம் பெரிதாக இருக்கிறதென்று இரண்டு பாகங்களாகப் பிரித்தார். உடனே மக்கள் அதை எதிர்த்தார்கள். நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது.



மிண்டோ பிரபு

மிண்டோ பிரபு (1905-1910) :— இவர் கர்ஸனுக்குப் பிறகு வைசிராயாக வந்தார். அப்போது நாட்டில் எங்கும் கிளர்ச்சியாக இருந்தது. இந்தியர்கள் கல்வியில் முன்னேற்ற மடைந்து தேசீய உணர்ச்சி பெறலாயினர். பத்திரிகைகளிலும், பொது மேடைகளிலும் சுய ஆட்சிக்காகக் கிளர்ச்சி செய்தார்கள். ஆகவே மிண்டோ இங்கிலாந்தில் இந்தியா மந்திரியாக இருந்த மார்லி பிரபுவுடன்

கலந்து ஓர் சீர்திருத்தச் சட்டத்தை ஏற்படுத்தினர். அதற்குத்தான் மிண்டோ-மார்லி சீர்திருத்தம் என்று பெயர். அதன்படி வைசிராய் நிர்வாக சபையில் ஓர் இந்தியர் நியமிக்கப்பட்டார். மாகாணங்களில் சட்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அதன் அங்கத்தினர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மிண்டோவுக்குப் பிறகு ஹார்டிஞ்சு பிரபு (1910-1916) வைசிராய் ஆனர். இவர் காலத்தில் ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தி அவரது ராணியுடன் இந்தியாவுக்கு வந்தார். 1912-ம் வருஷம் டில்லியில் அவர் முடிசூட்டிக்கொண்டார். அப்போது ஓர் பெரிய தர்பார் கூடியது. அச் சமயத்தில் டில்லியை இந்தியத் தலைநகராகச் செய்தார். வங்காளத்தை மறுபடியும் ஒன்றுசேர்த்தார்.

1914-ம் வருஷத்தில் ஆங்கிலேயருக்கும் ஜெர்மானியருக்கும் ஐரோப்பாவில் ஓர் பெரிய யுத்தம் நடந்தது. ஆகவே நம் நாட்டிலும் யுத்த முஸ்தீப்புகள் செய்யப்பட்டன. இப்போது ஹார்டிஞ்சு பிரபு தம் பதவியை ராஜிநாமா செய்து இங்கிலாந்து சென்ருர். அவருக்குப் பின் செம்ஸ்போர்டு பிரபு (1916-1921) வைசிராய் ஆனர். அவர் காலத்தில் இந்தியர்கள் மனிதர்கள், பொருள்கள், பணம் இவைகளை ஏராளமாக யுத்தத்திற்கு அளித்தார்கள். இந்திய வீரர்கள் யுத்தம் நடந்த பல இடங்களுக்குச் சென்று போர் செய்தார்கள். முடிவில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்ருர்கள். இந்தியர் யுத்த காலத்தில் செய்த உதவிகளைக் கண்டு ஆங்கிலேயர்கள் மகிழ்ச்சி அடைந்தார்

கள். யுத்தம் முடிந்தவுடன் இந்தியாவுக்கு சுயஆட்சி அளிக்கப்படும் என்று உறுதி கூறினர். 1918-ம் வருஷம் யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டது. அப்போது இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகு

செம்ஸ்போர்டு பிரபு

பிரபுவுடன் கலந்து வைசிராய் ஓர் சட்டம் செய்தார். அதற்குத்தான் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் என்று பெயர். அதனல் சட்ட சபை அங்கத்தினரின் எண்ணிக்கை அதிகரித்தது. மாகாணத்தில் இரட்டை ஆட்சி ஏற்பட்டது.

ஆனால் இந்தியர்களில் பலர் இந்த சீர்திருத்தங்களினால் திருப்தி அடையவில்லை. இந்தியாவுக்கு சுயராஜ்யம் அளிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள். அவர்களுக்கு மகாத்மா காந்தி



மகாத்மா காந்தி

தலைவரானார். அரசாங்கத்துடன் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். இச் சமயத்தில் தான் ரீடிங் பிரபு (1921-26) வைசிராய் ஆனார். தேசத்தில் எங்கும் கிளர்ச்சி ஏற்பட்டது. பலர் சிறை புகுந்தனர். இவர் காலத்தில் ஆரம்பக்

கல்வி பரவச் சட்டம் செய்யப்பட்டது. கோவில்கள், மடங்கள் முதலிய பொது ஸ்தாபனங்களை நன்கு பரிபாலிக்கச் சட்டங்கள் ஏற்பட்டன. பெண்களும் இவர் காலத்தில் வோட்டு சுதந்திரம் பெற்று சட்ட சபை அங்கத்தினர்கள் ஆனார்கள்.

இவருக்குப் பின் இர்வின் பிரபு (1926-31) வைசிராயாக வந்தார். இவர் மிகவும் சாந்தகுண முள்ளவர். இவர் நாட்டி லுள்ள குழப்பத்தை நீக்க எண்ணினார். காந்திஜீயுடன் இவர் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். சிறை சென் றவர்களை விடுதலை செய் தார். அரசியல் சமரசம் ஏற் படதேசத் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார். இவர் காலத்தில் தான் வட்ட மேஜை மகாநாடு நடந்தது. இவர் 1931-ல் தமது வேலை யை விட்டு இங்கிலாந்து சென்றார்.

இர்வின் பிரபு

இவருக்குப் பின் வெல்லிங்டன் பிரபு (1931-36) வைசிராய் ஆனார். இவர் காலத்தில் மறுபடியும் நாட்டில் போராட்டம் ஏற்பட்டது. மக்கள் மறுபடி யும் சிறை சென்றார்கள். வெல்லிங்டன் பிரபு மிக வும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஜனங்களின் கொதிப்பு அதிகரித்தது. கடைசியாக இவர் காலத்தில் இந்திய ருக்கு மாகாண சுய ஆட்சி அளிப்பது மேலானது என்று நினைத்து பார்லிமெண்ட் 1935-ல் ஓர் சீர்

திருத்தச் சட்டம் இயற்றியது. இச்சட்டம் மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. இது 1937-ம் வருஷம் லின்லித்கோ பிரபு (1936-43) வைசிராயாக இருந்த காலத்தில் அமுலுக்கு வந்தது. இன்னும் இவர் ஆட்சி காலத்தில் விவசாயிகளுக்கு அநேக நன்மைகள் ஏற்பட்டன.

இச் சமயத்தில் 1939-ம் வருஷம் உலக மகா யுத்தம் ஆரம்பித்தது. நாட்டில் எல்லா மக்களும் சேர்ந்து யுத்தசேவை செய்ய பல துறைகளில் வேலை செய்கிறார்கள். இந்தியர்கள் எல்லா பாகங்களிலும் போர் புரிந்து நேச நாட்டினருக்கு உதவி அளிக்கிறார்கள். நம் எல்லோருடைய முயற்சியாலும் கடவுள் அருளாலும் நமக்குச் சீக்கிரம் வெற்றி ஏற்படுவது திண்ணம்.

கேள்விகள்

1. ரிப்பன் பிரபு காலத்தில் ஏற்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள் யாவை?
2. கர்ஸன் செய்த விவசாய சீர்திருத்தங்கள் எவை?
3. வங்காளப் பிரிவினை ஏன் ஏற்பட்டது? அதன் பலன் என்ன?
4. மிண்டோ - மார்லி சீர்திருத்தம் என்பது எவ்வாறு முக்கியம்?
5. 1912-ல் என்ன விசேஷம் நடந்தது?
6. செம்ஸ்போர்டு காலத்தில் என்ன சீர்திருத்தம் ஏற்பட்டது?
7. மாகாண சுய ஆட்சி எவ்வாறு கிடைத்தது?

27. இந்திய முன்னேற்றம்

ஆங்கில அரசாட்சி ஏற்பட்ட காலம் முதல் நம் நாட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சமாதானமாக மக்கள் வாழ்கிருர்கள். கல்வி, விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலிய துறைகளில் இந்தியர்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிருர்கள். நாட்டில் திருட்டு, கொள்ளை முதலியவைகளால் பயமின்றி மக்கள் வாழ்ந்துவந்தார்கள். மக்கள் சௌகரியத்திற்கு அவசியமான தந்தி, தபால்,ரயில், பஸ் முதலியசாதனங்களும் ஏற்பட்டன.

ஆனலும் நம் நாடு இன்னும் பல துறைகளில் முன்னேற்றம் அடையவேண்டும். நம் மக்களிடத்து ஏழ்மையும், பிணியும், பஞ்சமும் அதிகமாக இருக்கின்றன. அநேக மக்கள் படிப்பில்லாமல் இருக்கிருர்கள். படித்தவர்கள் வேலை இல்லாமல் திண்டாடுகிருர்கள். ஆகவே நாட்டில் கைத்தொழில்களை அதிகரிக்கவேண்டும். அரசாங்கச் செலவில் கட்டாயக் கல்வியை எல்லோருக்கும் அளிக்கவேண்டும். சுகாதார முறைகள் மூலம் நாட்டில் பிணியை ஒழிக்க வேண்டும்.

கேள்வி

1. பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்ட நன்மைகளைக் கூறு. நம் நாட்டிற்கு வேண்டுபவை என்ன ?

The B. N. Press, Madras.

2771